## தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

### மானியக் கோரிக்கை எண் – 46

# தமிழ் வளர்ச்சி

## 2021 – 2022


**தங்கம் தென்னரசு**

**தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும்**
**தமிழ்ப் பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர்**



©
தமிழ்நாடு அரசு
2021

# தமிழ் வளர்ச்சித் துறை

2021-2022

## பொருளடக்கம்


| தொ. எண் | பொருண்மை | பக்கம் |
|---|---|---|
| 1. | **முன்னுரை** | 1-6 |
| 2. | தமிழ் வளர்ச்சித் துறை | 7-37 |
| 3. | மொழிபெயர்ப்புத் துறை | 38-41 |
| 4. | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் | 42-49 |
| 5. | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | 50-61 |
| 6. | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் | 62-71 |
| 7. | உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை | 72-80 |
| 8. | செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் | 81-86 |
| 9. | நிறைவுரை | 87 |
| 10, | வரவு- செலவுத் திட்ட மதிப்பீடு | 88 |

# தமிழ் வளர்ச்சித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2021-2022

## முன்னுரை

மொழியே மனிதனை இணைத்தது; வேட்டையாடித் திரிந்தவனை வேளாண்மைக்கு அழைத்தது. மொழியால் உதடுகள்மட்டும்அசையவில்லை,உள்ளங்களும்இசைந்தன. மொழிகள் மனிதனின் உணர்வுகளைப் பாதுகாக்கவும் பத்திரப்படுத்தவும் உதவின.

வாலில்லாத குரங்குகளுக்கும் மனிதனுக்கும் இடையே இருக்கும் மரபுக்கூறு மாற்றத்தில் 0.1 சதவிகிதம் மட்டுமே மனிதன் விரிவாகப்பேசுவதற்கும்,விளக்கமாகஉரைப்பதற்கும் காரணமாக இருந்தது என்று மானுடவியல் வல்லுநர்கள் முன்மொழிகிறார்கள். குரல்வளை, தொண்டை, நாக்குப் பகுதி என்று பேசும் உறுப்புகள் வளர்ச்சியடைந்ததால் மனிதன் எண்ணற்ற ஓசைகளை உச்சரிக்கக் கற்றுக்கொண்டான். அவன் மொழியைக் கேடயமாகவும், வாளாகவும் பயன்படுத்தக் கற்றுக்கொண்டான்.

விலங்குகளும் தமக்குள் மொழியைப் பயன்படுத்துகின்றன.மலரின் மணம் வண்டுகளை 'வா என்று'

---

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். குறள் 2

வரவேற்பது மகரந்தச்சேர்க்கை செய்வதற்காக. குயில்கள் இணையைத் தேடி இசைக்கின்றன. சிங்கம் இருப்பை உணர்த்த முழங்குகிறது. அச்சத்தின் காரணமாக அலறுகிறது குரங்கு. ஆசை வந்தால் தோகை விரிக்கிறது மயில். பூக்கள் இருக்கும் இடத்தை நடனத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றன தேனீக்கள். தன்னைப் பெண் தவளைகளுக்கு அடையாளம் காட்ட ஆண் நுணல் வாயால் கெடுகிறது.

விலங்குகளின் மொழி இனப்பெருக்கத்திற்காகவும் இரையைத் தேடுவதற்காகவும். மனிதன் மட்டுமே இதயத்தைத் தேடவும் மொழியைப் பயன்படுத்தினான். அவன் மொழியில் கடந்த காலத்தின் சுவடுகளும் எதிர்காலத்தின் கனவுகளும் இடம்பெற்றன. அவன் அடுத்த சந்ததிக்குத் தன் அறிவை மொழியின் மூலம் பரிமாறினான். மரபுக்கூறை மட்டுமல்ல, அறிவையும் இனவழிச்சரடாக எதிர்காலத் தலைமுறைகளுக்குப் பரிசாகத் தந்தான்.

## தாய்மொழி

கருவில் இருக்கும்போதே தாயின் சொற்களிடமிருந்து குழந்தை கற்றுக்கொள்கிறது. கருப்பைக்குள் பிஞ்சு விரல்களை அசைக்கும்போதே தாயின் குரல் அசைவையும் கண்டுகொள்கிறது. அதனால்தான் அதற்குத் தாய்மொழி என்று பெயர். நோம் சாம்ஸ்கி என்கிற மொழியியல் அறிஞர்

---

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு. குறள் 21

"ஒவ்வொரு குழந்தையும் பிறக்கிறபோதே தாய்மொழியின் கூறுகளுடன் பிறக்கிறது" என்று தன் ஆய்வில் குறிப்பிடுகிறார். அதனால்தான் எளிதாகத் தாய்மொழியைக் கற்றுக்கொள்ள முடிகிறது.

தாய்மொழியைப் பேணுவதும், போற்றிப் பாதுகாப்பதும் வெறும் ஒலிகள் குறித்ததும் எழுத்துகள் குறித்ததும் தொடர்பான பற்று அல்ல. அது தொன்றுதொட்டு வந்த விழுமியங்களையும் பண்பாட்டுக் குறியீடுகளையும் அறிந்தும் உணர்ந்தும் அவற்றைப் பிறழாமல் பின்பற்றி நெறியோடு கடைப்பிடித்து மேன்மையடைவதற்காக!

நம்மையும் அறியாமல் தாய்மொழியின் மீது நம் ஆழ்மனத்தில் பற்று ஒன்று படிந்து விடுகிறது. அதனால்தான் தாய்மொழி அரவம் கேட்காத அந்நிய தேசத்திற்குச் சென்றால் யாராவது தமிழ்மொழியில் திட்டினால் கூட தித்திக்கிறது.

## தமிழ்மொழி

தமிழ் மொழி உலகில் வழக்கில் இருக்கும் தொன்மையான மொழிகளில் ஒன்று என்று மொழியியல் வல்லுநர்கள் குறிப்பிடுகிறார்கள். பழமையும் தொடர்ச்சியும் வழக்கும் உள்ள செம்மொழியாகத் தமிழ் மொழி திகழ்கிறது. தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் மட்டும் அல்ல, புலம் பெயர்ந்த தமிழர்களும் தமிழ் என்கின்ற கண்ணுக்குத் தெரியாத இழைகளால்

---

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். குறள் 56

இணைந்திருக்கிறார்கள். உயிருக்கு இணையாக மொழியைத் தமிழர்கள் நேசிப்பதை உலகமே அதிசயித்துப் பார்க்கிறது.

தமிழைக் குறித்துச் சிந்திக்கும்போது அதன் சிறப்புகளும் அணிவகுத்து வருகின்றன. தமிழ் என்கின்ற சொல்லே இனிமையானது, தமிழுக்கு இனிமை என்கிற பொருளும் இருக்கிறது என்கிற காரணத்தால் 'தமிழ் தழீஇய சாயலவர்' என்று சீவக சிந்தாமணி குறிப்பிடுகிறது. வல்லினமும், மெல்லினமும், இடையினமும் தமிழ் என்கின்ற சொல்லில் தளைதட்டி நிற்கின்றன. தமிழின் சிறப்பு ழகரம். தமிழை அமிழ்துக்கு இணையாகப் புரட்சிக் கவிஞர் குறிப்பிடுகிறார். அமிழ்திலும் ழகரம் உண்டு. அழகிலும் ழகரம் உண்டு. ழகரமும், றகரமும், னகரமும் தமிழுக்கே உரிய சிறப்பு எழுத்துகள்.

எண்ணற்ற மொழிகளைக் கற்ற மகாகவி பாரதி 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்று குறிப்பிட்டார். மணிமேகலையும், கம்பராமாயணமும்,திருவாய்மொழியும்தமிழின் இனிமையைச் சிலாகித்துப் பேசுகின்றன. தமிழ்நாட்டில் மட்டும்தான் தமிழ்ச்செல்வன்,தமிழரசிஎன்றும்தமிழின்பெயரால்பலருக்கு இயற்பெயர்கள் உள்ளன. அவர்கள் தமிழை நேசிக்கும்போது அந்த இயற்பெயர்களே காரணப் பெயர்களாக மாறுகின்றன.

---

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும். குறள் 63

## தமிழ் என்ற சொல்

தமிழ் என்ற சொல் எவ்வாறு உருவானது என்பதே ஆய்வுக்குட்பட்டது. தமிழ் என்பது திராவிடம் என்பதன் மருவிய வடிவம் என்று அறிஞர் கால்டுவெல் குறிப்பிடுகிறார். ஆனால் மு. வரதராசனார் தமிழை மற்ற மொழியினர் சரியாக உச்சரிக்க முடியாமல் அதைப் பிறழ்வாகக் கூறியதன் தொடர்ச்சியாகத் திராவிடம் என்று ஆனது என்கிறார். தம்+இல் என்று தனக்கு இணையில்லை என்று வழங்கப்பட்ட சொல் தான் தமிழானது என்று சொல்பவர்களும் உண்டு. அசோகர் காலத்துப் பாறை சாசனங்களிலேயே தமிழ்நாடு அவர் ஆட்சி எல்லைக்கு உட்படாமல் தனித்திருந்தது தெரிய வருகிறது.

## தமிழின் சிறப்பு

தமிழ் செம்மொழி மட்டும் அல்ல, இன்றும் வழக்கில் இருக்கும் பயன்பாட்டு மொழி. அதைக் காட்சிக்கூடத்தில் வைத்து அழகு பார்க்கவும் முடியும், கைகளில் ஏந்தி பலனடையவும் முடியும். எண்ணற்ற மாற்றங்களைத் தன்னுள்ளே அகவயப்படுத்தி விரிந்துகொண்டே செல்கிறது. கடல் ஆழமாகவும், விரிவாகவும் இருப்பதற்குக் காரணம், அது அனைத்தையும் ஏற்றுக்கொள்ளவும் தன் கைகளை விரித்துத் தயாராக இருப்பதுமே. தமிழ் ஆழியைப்போல. பல

---

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. குறள் 90

மொழிகளின் தாக்கத்தைத் தன் சொற்களால் உள்வாங்கி வளர்ந்துகொண்டே செல்கிறது. அதனால்தான் அதில் குறிஞ்சியின் அழகைப் பற்றிப் படித்து, மலைச்சாரலில் மழைத்தூரலில் நனைந்த சுகத்தையும் பெற முடியும். தகவல் தொழில்நுட்பத்தைக் குறித்த கலைச்சொல் உருவாக்கத்தையும் காண முடியும். இலக்கியம், அறிவியல், சரித்திரம், மானுடவியல், புவியியல், மண்ணியல், உயிரியல், இயற்பியல், தாவரவியல், வேளாண்மை என்று அனைத்துத் துறைகளிலும் புதியபுதிய சொற்களை உருவாக்கிக்கொண்டே தமிழ் ஆழ்கடலாய் விரிந்துகொண்டே செல்வதால் தமிழர்கள் அதில் இன்பத் தோணிகளைச் செலுத்தி மகிழ்ந்திருக்க முடிகிறது.

அண்மையில் கீழடி அகழ்வாய்வில் 146 செ.மீ. நிலத்துக்கு அடியில் வெள்ளியிலான முத்திரை பதித்த காசு கிடைத்துள்ளது.இதன் மூலம் தமிழரின் நாகரிகப்பண்பாட்டின் தொன்மை பொதுயுகம் 6ஆம் நூற்றாண்டிற்கு முந்தையது எனத் தெரிய வந்துள்ளது. தொடர்ந்து தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்டு வரும் அகழாய்வுகள் மூலம் தமிழகத்தில் அகச்சான்று, புறச்சான்று மற்றும் அறிவியல் சான்றுகள் நமக்குக் கிடைத்து வருகின்றன. இவ்வாய்வுகள் மூலம் தமிழினத்தின் பெருமை உலகெங்கும் பரவி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

---

துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. குறள் 94

## இயல் - 1
## தமிழ் வளர்ச்சித் துறை

### 1) ஆட்சிமொழிச் செயலாக்கம்

### அ) ஆய்வு

தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தின்படி அனைத்து அரசு அலுவலகங்களிலும் அலுவல்மொழியாக நம் தாய்மொழியாம் தமிழ்மொழியைப் பயன்படுத்துதல் வேண்டும் என்ற நோக்கில் தமிழ் வளர்ச்சித் துறையால் அரசுத் துறைகள், வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் தொடர்ந்து ஆய்வுகள் நடத்தப் பெறுகின்றன.

இவ்வாய்வு பணிகள் தலைமைச் செயலகத் துறைகளில் தமிழ் வளர்ச்சித் துறைச் செயலாளர் அவர்களாலும், துறைத் தலைமை அலுவலகங்கள், வாரியங்கள், கழகங்கள், அரசு நிறுவனங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் ஆகியவற்றில் தமிழ் வளர்ச்சி இயக்குநராலும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அதேபோன்று மாவட்டங்களில் உள்ள அரசு அலுவலகங்களில் மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள், மாவட்டத் துணை மற்றும் உதவி இயக்குநர்களால் ஆய்வுகள் நடத்தப்பெறுகின்றன.

---

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்.    குறள் 114

## ஆ) ஆட்சிமொழிப் பயிலரங்குகள்

அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழியாம் தமிழ்மொழியினைச் சிறப்பாகச் செயற்படுத்திடும் வகையில் அரசுப் பணியாளர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன. இப் பயிற்சியில் அலுவலகக் குறிப்புகள், வரைவுகளில் பிழை நீக்கி எழுதுதல், ஆட்சிமொழி வரலாறு, சட்டம், ஆட்சிமொழியாகிய தமிழ்மொழியைச் செயற்படுத்துவதற்கெனச் செயலாக்க அரசாணைகள் மற்றும் ஆட்சிமொழித் திட்டச் செயற்பாட்டில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைதல், கணினியில் தமிழ் ஒருங்குறிப்பயன்பாடு என அனைத்துப் பொருண்மைகளிலும் பயிற்சி வகுப்புகள் மின்காட்சியுரை வாயிலாக விளக்கம் அளிக்கப்பெறுகிறது. ஆண்டுதோறும் ஆட்சிமொழிப் பயிலரங்கம் நடத்துவதற்கு ஒரு மாவட்டத்திற்கு ரூபாய் 50,000/- வீதம் நிதி வழங்கப்படுகிறது. மேலும் சென்னை மாவட்டத்தில் அரசு அலுவலகங்களின் எண்ணிக்கையினைக் கருத்தில் கொண்டு அரசுப் பணியாளர்களுக்குத் தனியாக ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி வகுப்புகள் 5 அணிகளாக நடத்தப் பெறுகின்றன.

---

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின். குறள் 120

## இ) ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்

அரசு, தன்னாட்சி நிறுவனங்கள், வாரியங்கள், கழகங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் அலுவலர்கள், பணியாளர்களுக்குத்தமிழ்இலக்கண,இலக்கியங்களில்புலமை வாய்ந்த வல்லுநர்கள், பிற அரசுத் துறை அலுவலர்களைக் கொண்டும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் ஆண்டுதோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடத்தப்பெற்று வருகின்றன.அரசுநிருவாகம்தமிழில்முழுமையாகநடைபெற இக்கருத்தரங்கம் பெரிதும் பயன்படுகிறது. ஆட்சிமொழிக் கருத்தரங்கம் நடத்திட ஆண்டுதோறும் ஒரு மாவட்டத்திற்கு ரூபாய் 20,000/- வீதம் நிதி வழங்கப்படுகிறது.

## ஈ) ஆட்சிமொழிச் சட்ட வாரம்

தமிழ்நாடு அரசின் 'எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!' என்ற விழுமியக் கொள்கையை வலியுறுத்தியும் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956ஆம் நாளை நினைவு கூரும் வகையிலும் ஆட்சிமொழி சட்ட வாரம் ஒருவாரக் காலத்திற்கு அனைத்து மாவட்டங்களிலும் கடைபிடிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டது. அனைத்து மாவட்டங்களிலுமுள்ள அரசு அலுவலகங்கள், வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் அரசுப்

---

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற வொழுக்கு. குறள் 148

பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதோடு கீழ்க்காணும் பொருண்மைகளில் நிகழ்ச்சிகளும் நடத்தப் பெறுகின்றன.

- ❖ கணினித்தமிழ் விழிப்புணர்வுக் கருத்தரங்கம்
- ❖ கணினியில் தமிழ் ஒருங்குறிப் பயன்பாடு குறித்த பயிற்சி அளித்தல்
- ❖ ஆட்சிமொழி மின்காட்சியுரைத் திட்ட விளக்கம்
- ❖ பள்ளிக் கல்லூரி மாணவர்களிடையே ஆட்சிமொழி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பட்டிமன்றம்
- ❖ அரசு அலுவலர் மற்றும் பணியாளர்களுக்குத் தமிழில் வரைவுகள், குறிப்புகள் பிழையின்றியும் பிறமொழிக் கலப்பின்றியும் எழுதிடப் பயிற்சி அளித்தல்
- ❖ பெயர்ப்பலகைகள் தமிழில் வைக்கப்பட வேண்டியதை வலியுறுத்தி வாணிக நிறுவனங்கள், கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் வாணிக அமைப்பு நிருவாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் நடத்துதல்

---

ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு. குறள் 161

- ❖ வாணிக நிறுவனங்கள் / கடைகள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் தமிழ், ஆங்கிலம், பிற மொழியை 5:3:2 என்ற அளவில் பெயர்ப்பலகை வைக்கப்படவலியுறுத்திஅனைத்துமாவட்டங்களிலும் தமிழ் ஆர்வலர்கள் மற்றும் தமிழ் அறிஞர் பள்ளி மாணவர்களைக் கொண்டு விழிப்புணர்வுப் பேரணி அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரால் தொடங்கி வைத்து நடத்தப்பெறுகிறது. இப் பேரணியில் துண்டறிக்கை மற்றும் அரசாணைகள் வழங்கியும் கைப் பதாகை ஏந்தியும் பேரணி நடத்தப்பெறுகிறது.
- ❖ ஆட்சிமொழித் திட்ட விளக்கக் கூட்டங்கள் ஒன்றியம், வட்டம், மாவட்டம் அளவில் நடத்தப்படுகின்றன.

## உ) சிறந்த குறிப்புகள், வரைவுகளுக்குப் பரிசுகள்

தமிழில் சிறந்த முறையில் குறிப்புகள் வரைவுகளை எளிய நடையில் எழுதும் அரசுப் பணியாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்ட நிலை, உள்ளாட்சி நிலை, தன்னாட்சி நிலை, சார்நிலை ஆகிய நான்கு நிலைகளில் வகைப்படுத்தப்பட்டு முதல் பரிசாக ரூபாய் 3,000/-, இரண்டாம் பரிசாக ரூபாய் 2,000/- மூன்றாம் பரிசாக ரூபாய் 1,000/- எனப் பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

---

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். குறள் 172

### ஊ) அரசு அலுவலகங்களுக்குக் கேடயம்

ஆட்சிமொழித் திட்டத்தைச் சிறப்பாகச் செயற்படுத்தும் முழக்கமான "எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!" எனும் இலக்கை எய்திய தலைமைச் செயலகத் துறைகள், அரசுத் துறைகள், வாரியங்கள், கழகங்கள் ஆகியவற்றின் துறைத்தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மாவட்ட நிலை அலுவலகங்கள் என்ற வகைப்பாட்டில் தெரிவு செய்து ஆண்டுதோறும் கேடயங்களும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகிறது.

### எ) ஆட்சிச் சொல்லகராதி

அரசுத் துறை அலுவலகங்கள், நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்களில் குறிப்புகள், வரைவுகள் ஆகியவற்றைப் பிறமொழிக் கலப்பில்லாமல் தமிழில் முழுமையாக எழுதுவதற்குத் துணைபுரிந்திட இந்நூல் அரசு எழுதுபொருள் அச்சுத் துறை வாயிலாக அச்சிட்டு விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றது. தமிழ் வளர்ச்சித் துறை வலைத்தளத்தில் இவ்வகராதிபதிவேற்றம்செய்யப்பட்டுள்ளது. (http://tamilvalarchithurai.com).

---

பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும். குறள் 186

## 2 ) விழாக்கள்

### அ) திருவள்ளுவர் திருநாள்

அனைத்துத் தமிழர்களாலும் அறிந்து போற்றப்படுபவராகவும் தமிழர்களின் பண்பாட்டு செறிவின் அடையாளமாகவும் கருத்துக் கருவூலமாகவும் திகழும் திருவள்ளுவரின் பெருமையினை உலகுக்குப் பறைசாற்றும் வகையில் தைத்திங்கள் 2ஆம் நாளில் தமிழ்நாடு அரசுச் சார்பாக ஆண்டுதோறும் திருவள்ளுவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்துச் சிறப்பு செய்யப்படுகிறது. மேலும் திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவாகவும் அன்றைய நாளில் தமிழறிஞர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கப்படுகின்றது.

### ஆ) உலகத் தாய்மொழி நாள்

உலகின் மூத்த மொழியாகிய நம் தமிழ்மொழியைப் போற்றிடும் வகையில் உலகத் தாய்மொழி நாளான பிப்ரவரி 21-ஆம் நாளன்று தமிழ்மொழியின் சிறப்பை இன்றைய இளைய தலைமுறையினரும், இனிவரும் இளைய தலைமுறையினரும் அறிந்துகொள்ளும் வகையில் மாநில அளவில் கவியரங்கம்,

---

பயனில பல்லார் முன்சொல்லல் நயனில
நட்டார் கண்செய்தலிற் றீது. குறள் 192

கருத்தரங்கம் நடத்தப்படுகிறது. தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் உலகத் தாய்மொழி நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

### இ) தமிழ்க் கவிஞர் நாள்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளான ஏப்ரல் 29ஆம் நாளினைத் தமிழ்க் கவிஞர் நாளாக அறிவிக்கப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்பட்டு வருகிறது.

### ஈ) தமிழ்நாடு நாள்

தனித்துவத் தமிழ்நாடு உருவாக்கப்பட்ட 01.11.1956-ஆம் நாளினைப் பெருமைப்படுத்தும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் நவம்பர் 1 ஆம் நாள் ”தமிழ்நாடு நாள்” விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

### 3) விருதுகள்

தமிழுக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தொண்டாற்றிவரும் தமிழறிஞர்களைப் பாராட்டிச் சிறப்பிக்கும் வகையிலும், தமிழ்மொழி, இனம், தமிழ்ப் பண்பாட்டைப் பேணிக்காக்கச் சங்கம் அமைத்துச் செயற்படும் அமைப்புகளுக்கும், தமிழ்மொழிக்கு உறுதுணையாகச் செயலாற்றிவரும் நாளிதழ், வார இதழ், மாத இதழ்

---

புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற. குறள் 213

உள்ளிட்டவற்றைப் பாராட்டியும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களில் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

| I. தமிழ் வளர்ச்சித் துறை விருதுகள் | |
|---|---|
| **வ. எண்** | **விருதின் பெயர்** |
| 1. | திருவள்ளுவர் விருது |
| 2. | பேரறிஞர் அண்ணா விருது |
| 3. | பெருந்தலைவர் காமராசர் விருது |
| 4. | மகாகவி பாரதியார் விருது |
| 5. | பாவேந்தர் பாரதிதாசன் விருது |
| 6. | தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது |
| 7. | முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது |
| 8. | தமிழ்த்தாய் விருது |
| 9. | கபிலர் விருது |
| 10. | உ.வே.சா. விருது |
| 11. | கம்பர் விருது |
| 12. | சொல்லின்செல்வர் விருது |
| 13. | உமறுப்புலவர் விருது |

---

சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை. குறள் 230

| | |
|---|---|
| 14. | ஜி.யு.போப் விருது |
| 15. | இளங்கோவடிகள் விருது |
| 16. | முதலமைச்சர் கணினித் தமிழ் விருது |
| 17. | அம்மா இலக்கிய விருது |
| 18. | சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது- 10 |
| 19. | சிங்காரவேலர் விருது |
| 20. | அயோத்திதாசப் பண்டிதர் விருது |
| 21. | மறைமலையடிகளார் விருது |
| 22. | அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது |
| 23. | காரைக்கால் அம்மையார் விருது |
| 24. | தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் நாளிதழ் விருது |
| 25. | தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் வார இதழ் விருது |
| 26. | தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது |
| 27. | தமிழ்ச் செம்மல் விருதுகள் (மாவட்டத்திற்கு ஒன்று வீதம்) |

நத்தம்போல் கேடும்உள தாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது. குறள் 235

| II. உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் | |
|---|---|
| 28. | இலக்கிய விருது |
| 29. | இலக்கண விருது |
| 30. | மொழியியல் விருது |
| III. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக விருதுகள் | |
| 31. | வீரமாமுனிவர் விருது |
| 32. | தேவநேயப் பாவாணர் விருது |

**4) கட்டணமில்லாப் பேருந்துப் பயணச் சலுகை**

தமிழ்ப் பணியைத் தொய்வின்றிச் செயலாற்றும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகத் தமிழ்நாடு அரசின் விருது பெற்ற விருதாளர்கள், தமிழறிஞர்கள் எல்லைக் காவலர்கள், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் ஆகியோருக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகை வழங்கப்பட்டுவருகிறது

**5) திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர் தூவிச் சிறப்பு செய்தல்**

தமிழ்மொழிக்கும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்ட தமிழ் அறிஞர்களைப் போற்றும் வகையில்

---

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன். குறள் 237

தமிழறிஞர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும், அவர்தம் திருவுருவப்படங்களுக்கு மலர் தூவியும் சிறப்பு செய்யப்பட்டு வருகின்றன. இதற்கென தமிழ் வளர்ச்சித் துறையால் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒரு நிகழ்விற்கு ரூபாய் 20,000/-வீதமும் பொதுப்பணித் துறை வாயிலாக மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒரு நிகழ்விற்கு ரூபாய் 20,000/- வீதமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | தமிழறிஞர்கள் பெயர் | மரியாதை செய்யப்படும் நாள் |
|---|---|---|
| 1. | திருவள்ளுவர் | திருவள்ளுவர் திருநாள் (தை 2 / சனவரி 15 அல்லது 16) |
| 2. | டாக்டர் உ.வே.சா. | பிப்ரவரி 19 |
| 3. | ஔவையார் | மார்ச்சு 8 |
| 4. | கம்பர் | மார்ச்சு 24 |
| 5. | இளங்கோவடிகள் | ஏப்ரல் 24 |
| 6. | தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் | மே 7 |
| 7. | மறைமலையடிகள் | சூலை 15 |
| 8. | திரு.வி.க. | ஆகத்து 26 |

---

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம். குறள் 249

| | | |
|---|---|---|
| 9. | தொல்காப்பியர்<br>1. சென்னைப் பல்கலைக்கழக மெரினா வளாகம், சென்னை<br>2. காப்பியக்காடு, கன்னியாகுமரி மாவட்டம் | சித்திரை முழுமதி நாள் |
| 10. | தமிழ்த்தாய் சிலை தமுக்கம் மைதானம், மதுரை | நாள்தோறும் மலர்மாலை அணிவித்தும் மற்றும் 15 நாள்களுக்கு ஒருமுறை புதுப்புடைவை அணிவித்தும் சிறப்பு செய்யப்படுகிறது. |

**6) சங்கப் புலவர்களுக்கு நினைவுத் தூண்**

சிவகங்கை மாவட்டம் ஒக்கூர் மாசாத்தியார், செங்கல்பட்டு மாவட்டம், இடைகழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், தென்காசி

---

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. குறள் 261

மாவட்டம் மாங்குடி மருதனார், கரூர் மாவட்டம் கருவூர்ப் புலவர்கள் பன்னிருவர் ஆகியோருக்குத் தமிழ்நாடு அரசால் 1990-ஆம் ஆண்டு நினைவுத் தூண்கள் நிறுவப்பட்டன. இந்நினைவு தூண்களுக்குத் தமிழ்க் கவிஞர் நாளான ஏப்ரல் 29-ஆம் நாளன்று மாலை அணிவித்தும் மலர்தூவியும் ஆண்டுதோறும் சிறப்பு செய்யப்பட்டுவருகிறது.

அதனைத் தொடர்ந்து சிவகங்கை மாவட்டம் மகிபாலன்பட்டியில் கணியன் பூங்குன்றனாருக்கும், கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூரில் கபிலருக்கும் நினைவுத் தூண்கள் நிறுவப்பட்டுள்ளன.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சங்ககாலப் பெண்பாற்புலவர்கள் 40 பேருக்கும் சேர்த்து ஒரு நினைவுத் தூண், மதுரை மாவட்டம், திருமங்கலம் திரளிக் கிராமத்தில் நக்கீரருக்கும், நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் வல்வில் ஓரிக்கும், சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டையில் கம்பருக்கும் நினைவுத் தூண்கள் நிறுவிட அரசால் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு இவ்விடங்களில் நினைவுத் தூண்கள் நிறுவப்படவுள்ளன.

### 7) சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு

ஒவ்வோர் ஆண்டும் வெளிவரும் சிறந்த தமிழ் நூல்களுக்கு 33 வகைப்பாடுகளின் கீழ்ப் பரிசுகள்

---

நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். குறள் 276

வழங்கப்படுகின்றன. முதல் பரிசு ரூபாய் 30,000/- எனவும், அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூபாய் 10,000/- எனவும் வழங்கப்படுகிறது.

**நூல்களின் வகைப்பாடுகள்:**

1. சிறுவர் இலக்கியம்
2. மரபுக் கவிதை
3. புதுக்கவிதை
4. புதினம்
5. சிறுகதை
6. நாடகம் (உரைநடை, கவிதை)
7. திறனாய்வு
8. மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி, இலக்கணம்
9. பிறமொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள்
10. நுண் கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்)
11. அகராதி, கலைக்களஞ்சியம், கலைச்சொல்லாக்கம், ஆட்சித் தமிழ்
12. பயண இலக்கியம்

---

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு. குறள் 288

13. வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு

14. நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வாணிகவழிகளும், அகழாய்வு

15. கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல்

16. பொறியியல், தொழில்நுட்பவியல்

17. மானுடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல்

18. சட்டவியல், அரசியல்

19. பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல்

20. மருந்தியல், உடலியல், நலவியல்

21. தமிழ் மருத்துவ நூல்கள் (சித்த மருத்துவம், ஆயுர்வேதம்)

22. சமயம், ஆன்மிகம், அளவையியல்

23. கல்வியியல், உளவியல்

24. வேளாண்மையியல், கால்நடையியல்

25. சுற்றுப்புறவியல்

26. கணினியியல்

27. நாட்டுப்புறவியல்

28. வெளிநாட்டு தமிழ்ப் படைப்பிலக்கியம்

---

பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமுந் தரும். குறள் 296

29. இதழியல், தகவல் தொடர்பு

30. பிற சிறப்பு வெளியீடுகள்

31. விளையாட்டு

32. மகளிர் இலக்கியம்

33. தமிழர் வாழ்வியல்

## 8) நூல் வெளியிட நிதியுதவி

சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் இத்திட்டம் 1966ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படுகிறது.

சிறந்த தமிழ் நூல்களை வெளியிடுதல், அரிய நூல்களை மறுபதிப்பாக வெளியிடுதல், பிறமொழி நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுதல், ஆய்வு நூல்களை வெளியிடுதல் என நூலின் தரத்தைப் பொறுத்து வல்லுநர் குழுவால் தெரிவு செய்யப்பெறும் நூல்களை அச்சிட்டு வெளியிட ஆண்டு வருவாய் மற்றும் வயதைக் கணக்கில் கொள்ளாமல் நிதியுதவித் தொகை அதிக அளவாக ரூபாய் 50,000/- வரை வழங்கப்படுகிறது.

## 9) குறள் பரிசு

கன்னியாகுமரியில் நடைபெற்ற அய்யன் திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழா நிகழ்ச்சியில் 1330 குறட்பாக்களையும்

---

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கா லென். குறள் 301

முற்றோதல் செய்த மாணவச் செல்வங்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 1000/- வீதம் குறள் பரிசு வழங்கும் திட்டம் மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.

தற்போது 'குறள் பரிசு' என்ற பெயரில் பரிசுத்தொகையாக ரூபாய் 10,000/- மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டுவருகிறது.

இத் திட்டத்தின்கீழ், அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஆண்டுதோறும் 70 பேருக்குப் பரிசுத்தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.

## 10) கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

தமிழில் பேச்சாற்றலையும், எழுத்தாற்றலையும், கவிதை எழுதும் திறனையும் மாணவப் பருவத்திலேயே வளர்க்கவும், தமிழ்ப்பற்றை மேம்படுத்தும் நோக்கிலும் ஆண்டுதோறும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பள்ளி (11 மற்றும் 12-ஆம் வகுப்பு) மற்றும் கல்லூரி மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பெற்றுப் பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

---

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும். குறள் 306

அ) மாவட்ட அளவில் பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை விவரம்

முதல் பரிசு ரூபாய் 10,000/-, இரண்டாம் பரிசு ரூபாய் 7,000/-, மூன்றாம் பரிசு ரூபாய் 5,000/-

ஆ) மாநில அளவில் பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை விவரம்

முதல் பரிசு ரூபாய் 15,000/-, இரண்டாம் பரிசு ரூபாய் 12,000/-, மூன்றாம் பரிசு ரூபாய் 10,000/-

## 11) இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை

தமிழ் மொழியினை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் நோக்கில் தமிழ் இலக்கியங்களையும் கவிதை, கட்டுரை, திறனாய்வு, புதினம் என இன்றைய இளம் தலைமுறையினரின் படைக்கும் திறனை வளர்க்கும் நோக்கிலும், இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறைத் திட்டம் முதன் முதலில் மேனாள் முதலமைச்சர் மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 2000ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

இப் பயிற்சிப் பட்டறையில் 200 மாணவர்கள் சேர்க்கப்பட்டு ரூபாய் 20 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. பயிற்சிக் காலத்தில் தங்குமிடம், உணவு, போக்குவரத்துக்

---

செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும். குறள் 313

கட்டணம் இலவசமாக வழங்கப்படுகிறது. இதுவரை 8 பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பெற்றுச் சுமார் 1500 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

இப் பயிற்சிப் பட்டறையில் பயிற்சி பெற்றவர்கள் பல்வேறு பெயர்களில் இலக்கிய அமைப்புகளைத் தொடங்கித் தமிழ் தொண்டாற்றிவருகின்றனர். பயிற்சி பெற்ற மாணவர்கள் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாகவும், திரைப்படப் பாடலாசிரியர்களாகவும், பட்டிமன்றப் பேச்சாளர்களாகவும், கவியரங்கு நடுவர்களாகவும், கவிஞர்களாகவும் திகழ்ந்து தமிழ்நாடு அரசிற்கும் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறைக்கும் புகழ் சேர்த்து வருகின்றனர்.

**12) இலக்கியத்தில் வினாடி- வினா**

இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறையில் பங்குபெறும் மாணவர்களிடையே 'தமிழ் இலக்கிய வினாடி-வினா' நடத்தப்பெற்றுப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இதற்கென ரூபாய் 30 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

முதன் முறையாக மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ் இலக்கிய வினாடி-வினா நிகழ்ச்சி நடத்தப்பட்டது

---

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும். குறள் 319

பரிசு விவரம்

| | | |
|---|---|---|
| முதலிடம் பெற்ற குழு | ரூபாய் 5,000 x 3 பேர் | ரூபாய் 15,000 |
| இரண்டாமிடம் பெற்ற குழு | ரூபாய் 3,000 x 3 பேர் | ரூபாய் 9,000 |
| மூன்றாமிடம் பெற்ற குழு | ரூபாய் 2,000 x 3 பேர் | ரூபாய் 6,000 |
| | மொத்தம் | ரூபாய் 30,000 |

## 13) நூல்கள் நாட்டுடைமை

தமிழறிஞர்களின் கருத்துக் கருவூலங்களாகத் திகழும் நூல்கள் அனைத்தும் பொது மக்களைச் சென்றடைய வேண்டும் எனும் நோக்கில் மறைந்த தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இதுவரை 156 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு மரபுரிமையர்களுக்குப் பரிவுத்தொகையாக ரூபாய் 11.52 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## 14) நாட்டுடைமை நூல்களை அச்சிட்டு வெளியிடும் திட்டம்

தமிழறிஞர்களின் அரிய கருத்துகள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் ஆண்டுதோறும், உலகத்

---

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை. குறள் 327

தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக ரூபாய் 20 இலட்சம் மதிப்பில் அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. இதுவரை 158 நூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

## 15) உதவித் தொகை வழங்கும் திட்டம்

### அ) அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை

தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தொண்டாற்றிய தமிழறிஞர்கள் அவர்தம் அகவை முதிர்ந்த காலத்தில் வறுமையில் வாடாமலும் தொடர்ந்து தமிழ்ப் பணி ஆற்றிவரும் வகையிலும் திங்கள்தோறும் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத் திட்டத்தின்கீழ்த் தற்போது உதவித் தொகையாக ரூபாய் 3,500/- மற்றும் மருத்துவப்படி ரூபாய் 500/- எனவும் அவரின் மறைவிற்குப் பின் அவரின் மரபுரிமையருக்கு உதவித்தொகை ரூபாய் 2,500/- மற்றும் மருத்துவப்படி ரூபாய் 500/- என்ற வகையிலும் வழங்கப்படுகிறது.

இதுவரை அகவை முதிர்ந்த தமிழறிஞர் மற்றும் மரபுரிமையர் 1134 பேருக்கு உதவித் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

---

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். குறள் 341

## ஆ) எல்லைக் காவலர்களுக்கு உதவித்தொகை

மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்ட போது தமிழ்நாட்டின் எல்லைகளைக் காக்கும் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்களுக்கு அவர்களின் வாழ்நாள் முழுவதும் உதவித் தொகை திங்கள்தோறும் ரூபாய் 5500/- மற்றும் மருத்துவப்படி ரூபாய் 500/- எனவும் வழங்கப்படுகிறது.

## இ) எல்லைக் காவலர்களின் மரபுரிமையருக்கு உதவித்தொகை

எல்லைக் காவலரின் மறைவிற்குப் பின் அவருடைய மரபுரிமையருக்கு வாழ்நாள் முழுவதும் உதவித்தொகை திங்கள்தோறும் ரூபாய் 3000/- மற்றும் மருத்துவப்படி ரூபாய் 500/- என்ற வகையில் வழங்கப்படுகிறது

இத் திட்டத்தின்கீழ் இதுவரை எல்லைக் காவலர்கள் 404 பேருக்கும், எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்கள் 259 பேருக்கும் உதவித்தொகை ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## ஈ) தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை

தமிழ்மொழி, தமிழ் இலக்கியத்தைக் காக்கும் போராட்டங்களில் தமது சான்றாண்மையை வெளிப்படுத்திடும் வகையில் சிறை சென்று தியாகம் புரிந்தவர்களுக்கு

---

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும். குறள் 349

அவர்களின் வாழ்நாள் முழுவதும் உதவித்தொகை திங்கள்தோறும் ரூபாய் 4500/- மற்றும் மருத்துவப்படி ரூபாய் 500/- என்ற வீதத்தில் வழங்கப்படுகிறது.

**உ) தமிழறிஞர்களின் மரபுரிமையருக்கு உதவித்தொகை**

தமிழறிஞர்களின் மறைவுக்குப் பின்னர் அவர்களின் மரபுரிமையருக்கு உதவித்தொகை திங்கள்தோறும் ரூபாய் 2500/- மற்றும் மருத்துவப் படி ரூபாய் 500/- எனவும் வழங்கப்படுகிறது.

இத் திட்டத்தின்கீழ் இதுவரை தமிழறிஞர்கள் 1104 பேருக்கும், தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள் 958 பேருக்கும் உதவித்தொகை ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**ஊ) தமிழறிஞர் / எல்லைக் காவலர் உதவித் தொகை பெற்று வருபவர்கள் இறக்கும் நேர்வில் ஈமச்சடங்கிற்கு நிதியுதவி**

தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெற்றுவரும் தமிழறிஞர்கள் / எல்லைக் காவலர்கள் இறக்கும் நேர்வில் அவரின் ஈமச்சடங்குச் செலவுகளுக்காக இறந்தவரின் கணவருக்கோ / மனைவிக்கோ அல்லது தகுதியுடைய மரபுரிமையருக்கோ ரூபாய் 5000/- வழங்கப்படுகிறது.

---

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. குறள் 352

## 16) மறைந்த தமிழறிஞர்களுக்கு இறுதி மரியாதை செலுத்துதல்

நாடறிந்த புகழ்பெற்ற தமிழறிஞர்கள் இயற்கையெய்தும் நேர்வில் அவர்களுக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் மலர்வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தப்படுகிறது. அவ்வகையில் 17.05.2021 ஆம் நாளன்று மறைந்த திரு. கி.ராஜநாராயணன் மற்றும் 26.07.2021 ஆம் நாளன்று மறைந்த திரு. இரா.இளங்குமரனார் ஆகியோரின் உடலுக்கு அரசு சார்பில் மலர்வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தப்பட்டது.

## 17) நல்கைகள்

### அ) தமிழ்நாட்டில் வழங்கப்படும் நல்கைகள்

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, உலகத் தமிழ்ச்சங்கம், மதுரை ஆகிய நிறுவனங்கள் மேற்கொண்டுவரும் தமிழ்ப்பணியில் தொய்வு ஏற்படாமல் தொடர்ந்து சீரிய முறையில் செயல்படவும், மேலும் அதில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதியம், பிற திட்டப் பணிகளுக்காகவும் ஆண்டுதோறும் நல்கைகள் வழங்கப்பெறுகின்றன.

---

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு. குறள் 358

### ஆ) பிற மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்குதல்

இந்தியாவிலுள்ள பிற மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழ் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்பக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் ஆந்திராவிலுள்ள திராவிடப் பல்கலைக்கழகம் குப்பம், அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள குவகாத்திப் பல்கலைக்கழகம், வாரணாசி இந்துப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்குக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும், கோரிக்கை அடிப்படையில் பிற பல்கலைக்கழகங்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### இ) பிற மாநிலப் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் பணியிடங்களுக்கு நிதியுதவி வழங்குதல்

பிற மாநிலப் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசின் நல்கையால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் திராவிடப்

---

அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா குறள் 366

பல்கலைக்கழகத்தில் 2008 ஆம் ஆண்டு ஓர் பேராசிரியர், ஓர் இணைப்பேராசிரியர், இரண்டு உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு நல்கைகள் வழங்கப்பட்டுவருகின்றன. அதில் இரண்டு உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. ஏனைய பணியிடங்களை நிரப்பப் பல்கலைக்கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. குவகாத்திப் பல்கலைக்கழகம், வாரணாசி இந்துப் பல்கலைக்கழகம் இரண்டிலும் இயங்கிவரும் தென்னிந்திய மொழிகள் துறையில் ஓர் உதவிப் பேராசிரியர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு நல்கையாக முறையே ரூபாய் 1,42,488/-, ரூபாய் 1,55,360/- வழங்கப்பட்டுள்ளது.

### ஈ) குவகாத்திப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்குக் கணினி மற்றும் நூலகம் அமைத்திட நிதியுதவி

குவகாத்திப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் ரூபாய் 2.90 இலட்சம் செலவில் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் கணினிகள் வழங்கப்பட்டும், தமிழ் நூலகம் அமைக்கப்பட்டும் செயற்பட்டுவருகிறது.

### உ) வாரணாசி - பனாரசு இந்துப் பல்கலைக்கழகத்தில் மொழி ஆய்வுக் கூடம்

தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிராதவர்கள் எளிதாகவும் விரைவாகவும் தமிழ் கற்கும் வகையில்

---

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு. குறள் 382

வாரணாசி-பனாரசு இந்துப் பல்கலைக்கழகத்தில் மொழி ஆய்வுக்கூடம் தொடங்குவதற்கு ரூபாய் 8 இலட்சம் வழங்கப்பட்டுச் செயல்பட்டுவருகிறது.

## ஊ) பிற மாநிலங்களில் தமிழ் அமைப்புகள் / சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குதல்

இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள், தமிழர் பண்பாடு மற்றும் நாகரிகத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் நோக்கிலும் அம் மாநிலத்தில் தமிழ்ப் பண்பாட்டைப் பரப்பிடும் வகையிலும் தமிழ் அமைப்பு / சங்கங்கள் நிறுவிச் செயற்படுத்திவருகின்றனர். அவர்களின் தமிழ் உணர்வை ஊக்குவிக்கும் பொருட்டுக் கோரிக்கையின் அடிப்படையில் தமிழ்நாடு அரசால் நிதியுதவி வழங்கப்பட்டுவருகிறது. இதுவரை திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம், பெங்களூரு தமிழ்ச் சங்கம், நவி மும்பைத் தமிழ்ச் சங்கம், புவனேஸ்வர் தமிழ்ச் சங்கம், தில்லித் தமிழ்ச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பிற மாநிலங்களிலுள்ள தமிழ் அமைப்புகள் / சங்கங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் நிதியுதவி வழங்கப்படும்.

---

இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு. குறள் 385

## எ) பிற மாநிலங்கள் / அயல்நாட்டு பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கை நிறுவுதல்

பிறமாநில, அயல்நாட்டு பல்கலைக்கழகங்களில் தமிழ்நாடு அரசால் தமிழ் இருக்கை ஏற்படுத்தித் தமிழைப் பாரெங்கும் பரப்பிடும் வகையில் நிதியுதவி வழங்கப்பட்டுவருகிறது.

தமிழ் இருக்கை நிறுவுவதன் மூலம் தமிழ் இலக்கியம், இலக்கணம், பண்பாடு உள்ளிட்டவை தொடர்பான ஆய்வுகள் மேம்படும். அங்குள்ள நூலகங்களிலும் ஆவணக் காப்பகங்களிலும் உள்ள தமிழ் தொடர்பான நூல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் அரிய நூல்களைப் பதிப்பிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

ஜெர்மனியிலுள்ள கொலோன் பல்கலைக்கழகத்தில் இந்தியவியல், தமிழியல் துறை 1963இல் தொடங்கப்பட்டது. நிதிப் பற்றாக்குறையால் செப்டம்பர் 2020 தமிழ்த்துறையை மூடுவதாகப் பல்கலைக்கழக நிருவாகம் அறிவித்தது. தற்போது தமிழ்த்துறை தொடர்ந்து தொய்வின்றிச் செயல்பட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் 1.25 கோடி வழங்கப்படுமென 07.07.2021 ஆம் நாளன்று அறிவிக்கப்பட்டு 12.07.2021ஆம் நாளன்று தொகை வழங்கப்பட்டது

---

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. குறள் 389

தமிழ்நாடு அரசின் வைப்புத் தொகையுடன் கீழ்க்காணும் நிறுவனம் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் ஆய்விருக்கைகள், தமிழ் இருக்கைகள் நிறுவப்பட்டுள்ளன.

| வ. எண் | நிறுவனம் | வைப்புத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| **தமிழ்நாட்டில்** | | |
| 1. | தொல்காப்பியர் ஆய்விருக்கை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை | 50 இலட்சம் |
| 2. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்விருக்கை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை | 1 கோடி |
| 3. | இராபர்ட் கால்டுவெல் ஆய்விருக்கை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் | 1 கோடி |
| **இந்தியாவில் பிற மாநிலங்களில்** | | |
| 4. | ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி | 50 இலட்சம் |
| 5. | உத்கல் பண்பாட்டு பல்கலைக்கழகம், ஒடிசா | 10 இலட்சம் |

---

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. குறள் 397

| | | |
|---|---|---|
| 6. | இந்து பல்கலைக்கழகம், வாரணாசி | 3 இலட்சம் |
| | **அயல்நாடுகளில்** | |
| 7. | மகாத்மா காந்தி நிறுவனம், மொரிசியசு | 1 கோடி |
| 8. | ஹார்வர்டு பல்கலைக்கழகம், அமெரிக்கா | 10 கோடி |
| 9. | ஹூஸ்டன் பல்கலைக்கழகம், அமெரிக்கா | 1 கோடி |
| 10. | டொராண்டோ பல்கலைக்கழகம், கனடா | 1 கோடி |
| 11. | கொலோன் பல்கலைக்கழகம், ஜெர்மனி | 1.25 கோடி |

## ஏ) மாநாடுகளுக்கு நிதியுதவி

தமிழ்நாடு அரசால் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, ஐரோப்பியத் தமிழ் ஆய்வு மாநாடு, தமிழ் இணைய மாநாடு போன்றவற்றிற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

---

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின். குறள் 403

## இயல் -2

## மொழிபெயர்ப்புத் துறை

### 1) தோற்றமும் வளர்ச்சியும்

"எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"

(நன்னூல் – பொதுவியல் - 37)

என்னும் நன்னூலாசிரியர் வகுத்த மரபின்படி மொழியாக்கப் பணிகளை மேற்கொண்டுவரும் தலைமைச் செயலக மொழிபெயர்ப்புப் பிரிவு, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே உருவாக்கப்பட்டதாகும். 1956-ஆம் ஆண்டு தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தைத் தலைமைச் செயலகத்தில் முழுமையாகச் செயற்படுத்துவதில் தலைமைச் செயலகத் துறைகளுக்கு உற்ற துணையாக மொழிபெயர்ப்புப் பிரிவு திகழ்ந்து வருகிறது.

மொழியாக்கம், கூர்ந்தாய்வு, ஒருமுகப்படுத்துதல் உள்ளிட்ட மொழியாக்கத்தின் பல்வேறு படிநிலைகளைக் கைகளால் எழுதிப் பின் தட்டச்சு செய்துவந்த நிலை மாறி, அண்மைக்காலத் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியோடு தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டு, 'காகிதமில்லா அலுவலக நடைமுறை' என்னும் 'மின்-அலுவலக'

---

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று. குறள் 407

முன்முயற்சிக்கு முன்னுதாரணமாக மொழிபெயர்ப்புப் பிரிவு விளங்குகிறது.

## 2) மொழியாக்கப் பொருண்மைகள்

தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளிடமிருந்து பெறப்படும் அரசாணை அறிவிக்கைகள், சுற்றோட்டக் குறிப்புகள், சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படும் ஏடுகள், பொதுக் கணக்குகள் குழு மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தணிக்கை அறிக்கைகள், பொதுத் தேர்தல் தொடர்பான கையேடுகள், மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கைகள், மாநிலத் தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கைகள், விழிப்புப்பணி ஆணையத்தின் அறிக்கைகள் உள்ளிட்ட தலைமைச் செயலகத் துறைகள் தொடர்பான அனைத்துக் கோப்புகளும் ஆவணங்களும்,நேர்விற்கேற்பத் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு உரிய துறைகளுக்கு உடனுக்குடன் அனுப்பும் பணியைத் தலைமைச் செயலக மொழிபெயர்ப்புப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் செயலகத்திலிருந்தும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அலுவலகத்திலிருந்தும் வரப்பெறும் கடிதங்கள் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் மாளிகையின் செய்தி

---

செவுக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். குறள் 412

வெளியீடுகள் உள்ளிட்ட ஏனைய மொழியாக்கப் பணிகளையும் மொழிபெயர்ப்புப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரை, மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் படிக்கப்படும் நிதிநிலையறிக்கை உரை, வெள்ளையறிக்கை போன்றவற்றின் தமிழாக்கப் பணிகளுக்காக மொழிபெயர்ப்புப் பிரிவிலிருந்து மாற்றுப்பணி அடிப்படையில் மொழிபெயர்ப்பு அலுவலர்கள் நிதித்துறைக்கு அனுப்பப்பட்டு வருகிறார்கள்.

தமிழ் மற்றும் ஆங்கில மொழியாக்கம் மட்டுமல்லாது, தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளிடமிருந்து வரப்பெறும் இந்தி, மலையாளம் மற்றும் தெலுங்கு ஆகிய பிறமொழி சார்ந்த மொழியாக்கங்களையும் மொழிபெயர்ப்புப் பிரிவு தன் பணியாகக் கொண்டுள்ளது.

## 3) மொழிபெயர்ப்பு இயக்குநரின் கூடுதல் பொறுப்புகள்

மொழிபெயர்ப்புப்பிரிவு இயக்குநர் வழக்கமான அலுவல்சார் மொழிபெயர்ப்புப் பணிகளை நெறிப்படுத்தும் பணிகளுடன்,

- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சார்ந்த பொருண்மைகளை அரசு நிலையில் கையாளுவதற்கு ஏதுவாக ஒருங்கிணைப்பாளராகவும்,

---

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். குறள் 428

- **தலைமைச் செயலகத்தில் தமிழ் ஆட்சிமொழித் திட்டதை முழுமையாகச் செயற்படுத்தும் வகையில் தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்படும் அரசாணைகள் அனைத்தும் தமிழில் அமையும் வகையில் தமிழாக்கப் பணிகளை ஒருமுகப்படுத்தும் ஒருங்கிணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.**

---

அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். குறள் 430

## இயல் -3
## செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

### 1) தோற்றம்

சொற்களே மொழியின் வளம் காட்டும் அளவுகோல். சொற்களின் வளம் கூடக் கூட மொழியின் நலம் கூடும். ஒரு மொழி வாழும் மொழியாக நிலைக்க வேண்டுமென்றால் அம்மொழியின் சொற்கள் பாதுகாக்கப்பட்டுத் தொடர்ந்து புழக்கத்தில் இருத்தல் வேண்டும். சொற்கள் பாதுகாக்கப்படவில்லையென்றால் நாளடைவில் நினைவில் அகன்று வழக்கொழிந்துவிடும். அதன்பின்னர் மொழியின் சொல்வளம் குன்றிப் பிறமொழிச் சொற்களின் தாக்கம் அதிகமாகிவிடும். இந்நிலை ஏற்படாமலிருக்க ஒவ்வொரு மொழியிலும் அம்மொழி சொற்களைப் பாதுகாக்க வேண்டியது முதன்மையான கடமையாகிறது.

அந்த வகையில், தொன்மைமிகு தமிழ்மொழியின் சொல்வளங்களை அகராதிகளில் பதிவுசெய்து பாதுகாப்பதற்கென்றே 1974ஆம் ஆண்டு 'முத்தமிழ் அறிஞர்' கலைஞர் அவர்களால் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தோற்றுவிக்கப்பெற்றது.

---

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். குறள் 435

## 2) நோக்கம்

அகராதிகள், சொற்களையும் அவற்றின்வழியே மக்களினத்தின் தொல்மரபு, பழக்கவழக்கம், பண்பாடு, அரசியல், வாணிகம் உள்ளிட்ட வரலாறுகளையும் பாதுகாத்து அடுத்தடுத்த தலைமுறையினருக்குக் கொண்டுசெல்லும் சொற்கருவூலங்களாகும். மொழியைக் காக்கவும், மொழிப்புலமையை வளர்த்தெடுக்கவும் துணைசெய்யும் அகராதிகளை உருவாக்குவதென்பது நுட்பமிகு ஆய்வுப்பணியாகும். சொற்கள் காலந்தோறும் மாற்றத்திற்கு உட்படுபவை என்பதனால் மொழி உள்ளளவும் அகராதிப்பணி என்பது இடையறாமல் தொடரவேண்டிய அறிவுப்பணியாகும்.

தமிழ்மொழிக் காப்பினையும் வளர்ச்சியினையும் நோக்கமாகக் கொண்டு 1974ஆம் ஆண்டுமுதல் அகராதிப் பணிகளைச் செய்துவரும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தால், நடைமுறைத் தமிழ் அகரமுதலி, மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி, அயற்சொல் அகராதி ஆகியவை வெளியிடப்பட்டுள்ளதோடு, சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் 31 தொகுதிகள் புதுக்கம் (Update) செய்யப்பட்டு, திருந்திய பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளன.

---

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். குறள் 442

### 3) இயக்ககச் செயற்பாடுகள்

#### அ) தமிழ்க் கலைக்கழகம்

மக்களின் பேச்சு வழக்கிலும், செய்தி ஊடகங்களிலும் வழங்கப்பட்டுவரும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை வடிவமைத்து, மாதமொன்றுக்கு 1000 தமிழ்க் கலைச்சொற்கள் என்ற இலக்குடன் மாதம் இரு கூட்டங்கள் நடத்தப்பட்டுக் குழு உறுப்பினர்களால் ஏற்பளிக்கப்படும் சொற்கள் உடனுக்குடன் சொற்குவை வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். மேலும், அச்சொற்கள் அரசாணை வாயிலாகவும் வெளியிடப்பட்டுவருகின்றன. இச்சொற்களைத் தேவையான இடங்களில் படங்களுடன் இவ்வியக்ககத்தின் சொற்குவை வலைத்தளத்தின் (sorkuvai.com) வழியாகவும், முகநூல் (Facebook), புலனம் (Whatsapp), சுட்டுரை (Twitter), படவரி (Instagram), நாளிதழ், மாத இதழ்கள் வாயிலாகவும் பொதுமக்கள், மாணவர்கள், அரசு அலுவலர்கள், ஆய்வறிஞர்களின் பயன்பாட்டிற்கு வழங்குவதற்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

#### ஆ) சொற்குவை

சொற்குவை வலைத்தளத்தில் (sorukuvai.com) 2021 சூலை வரை 3,91,682 தமிழ்ச் சொற்கள் பதிவேற்றம்

---

மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும். குறள் 455

செய்யப்பெற்றுள்ளன. சொற்குவை வலைத்தளத்தில் தமிழ்க் கலைக்கழகம் ஏற்பளிக்கும் சொற்கள், கூட்ட நிகழ்வுகள், அகராதியியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கம், வல்லுநர் குழுக் கூட்டம் குறித்த செய்திகள், ஒளிப்படங்கள், உரைத் துளிகள் மற்றும் இயக்ககச் செயற்பாடுகள் ஆகியன உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியன வெளியிட்டுள்ள பல்வேறு துறைகளைச் சார்ந்த அகராதிகளைப் பெற்றுச் சொற்குவை வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**இ) தமிழ் மரபுத்தொடர் அகராதி**

தொழில்முறை தொடர்பாகவும் பேச்சுவழக்குத் தொடர்பாகவும் தமிழ்மொழியில் வழங்கும் மரபுத்தொடர்களைத் தொகுத்து 'தமிழ் மரபுத்தொடர் அகராதி' என்னும் நூலாக வெளியிடுவது தொடர்பாகச் சொல்தொகுக்கும் பணி நிறைவுற்றுக் கணினியச்சுப் பணி நடைபெற்று வருகிறது.

**ஈ) மயங்கொலிச் சொல்லகராதி**

தமிழ்மொழியில் உள்ள மாற்றொலியன் எழுத்துகள் (ண, ந, ன, ர, ற, ல, ள, ழ) தவறான ஒலிப்பால் பொருள் மாற்றம் பெற்றுவிடுகின்றன. எனவே அவற்றைத் தெளிவிக்கும்

---

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல். குறள் 461

வகையில், தமிழிலுள்ள மயங்கொலிச் சொற்களைத் தொகுத்து, 'மயங்கொலி சொல்லகராதி' எனும் நூலாக வெளியிடுவது தொடர்பாகச் சொல் தொகுக்கும் பணி நிறைவுற்றுக் கணினியச்சுப் பணி நடைபெற்று வருகிறது.

**உ) பையடக்க அகராதி**

மாணவர்களும், பேராசிரியர்களும், பொதுமக்களும் பயன்பெறும் வகையில் சொற்களைத் தொகுத்து அவற்றிற்கான பொருள்கள், இலக்கணக் குறிப்புகள், இலக்கியக் குறிப்புகள் உள்ளிட்ட குறிப்புகளைத் தொகுத்து 'பையடக்க அகராதி'யாக வெளியிடுவது தொடர்பாகச் சொல் தொகுக்கும் பணி நிறைவுற்றுக் கணினியச்சுப் பணி நடைபெற்று வருகிறது.

**4) தமிழ் அகராதியியல் நாள் விழா**

தமிழ் அகராதியியல் அமைப்பு முறைக்கு முன்னோடியாக விளங்கிடும் வீரமா முனிவரின் தமிழ்த் தொண்டைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 8ஆம் நாளை 'தமிழ் அகராதியியல் நாளாகக்' கொண்டாடவும், அன்றும் அடுத்த நாளும் என இரண்டு நாள்கள் பன்னாட்டு கருத்தரங்கமும் நடத்த ஆணையிடப்பட்டுள்ளது. இவ்விழாவில், தூயதமிழிலேயே பேசுகின்ற மூவருக்குத் தூயதமிழ்ப்பற்றாளர்

---

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு. குறள் 467

சான்றிதழும், தலா ஐந்தாயிரம் ரூபாய் பரிசுத்தொகையும், பள்ளி மாணவர்களுக்கான மாநில அளவிலான சொல்லாக்கம் மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு இரண்டு போட்டிகளிலும் முறையே முதல் பரிசாக ரூபாய் 10,000/- மும், இரண்டாம் பரிசாக ரூபாய் 5,000/- மும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கிய 'அகராதி ஆய்வு மலர்' வெளியிடப்படுகிறது.

## 5) "சொல் வயல்" மின்னிதழ் மாதந்தோறும் வெளியிடுதல்

சொல்லாய்வுச் சிந்தனைகள், தமிழ்மொழி குறித்த அரிய செய்திகள், மொழியியல் மற்றும் அகராதியியல் வல்லுநர்களின் கருத்தாய்வுகள் உள்ளிட்ட செய்திகளோடு 2020 சூன் மாதத்திலிருந்து "சொல்வயல்" என்னும் மின்னிதழ், சொற்குவை (sorkuvai.com) வலைத்தளத்தில் வெளியிடப்பட்டு வருகிறது.

## 6) சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம்

சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டத்தில், கல்லூரிக்கு 10 மாணவர்கள் வீதம் மொத்தம் 200 மாணவர்கள் தேர்வு செய்யப்பெற்று, இன்றைய காலத்தில் நாள்தோறும் பெருகிவரும் பலதுறை சார்ந்த சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை உருவாக்குவது

---

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். குறள் 468

குறித்துத் தேர்ந்த அறிஞர்களைக் கொண்டு பயிற்சியளித்து, 'சொற்குவை மாணவத் தூதுவர்' என்ற அரசுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. முதற்கட்டமாகச் சென்னையிலுள்ள 20 கல்லூரிகளைச் சேர்ந்த 200 மாணவர்களுக்குத் தூயதமிழ்ப் பயிற்சி அளிக்கப்பெற்று அரசுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

## 7) தூயதமிழ்ப் பற்றாளர் விருது

அன்றாட நடைமுறை வாழ்க்கையிலும் மொழிக் கலப்பின்றித் தூயதமிழிலேயே பேசுவோரிலிருந்து ஆண்டுதோறும் மாவட்டத்திற்கு ஒருவரைத் தேர்வுசெய்து அவர்களுக்கு தமிழ் அகராதியியல் நாள் விழாவின்போது பாராட்டுச் சான்றிதழ் மற்றும் 'தூயதமிழ்ப் பற்றாளர் விருது' வழங்கி, விருதுத் தொகையாக ரூபாய் 20,000/-மும் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## 8) தூய தமிழ் ஊடக விருது

தூய தமிழைப் பயன்படுத்தும் காட்சி ஊடகங்களையும், அச்சு ஊடகங்களையும் பாராட்டி ஊக்கமளிக்கும் வகையில், ஆண்டுதோறும் ஒரு காட்சி மற்றும் ஓர் அச்சு ஊடகத்தினைத் தேர்ந்தெடுத்து, தமிழ் அகராதியியல் நாள் விழாவின்போது தங்கப் பதக்கம், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் 'தூய தமிழ் ஊடக விருது' வழங்கி, விருதுத் தொகையாக ரூபாய் 50,000/-மும் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

---

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின். குறள் 475

## 9) நற்றமிழ்ப் பாவலர் விருது

தம் கவிதைப் படைப்புகளில் பிறமொழிக் கலப்பின்றித் தூயதமிழ்ச்சொற்களையும்புதியதமிழ்க்கலைச்சொற்களையும் பயன்படுத்தும் பாவலர்களுள் ஆண்டுதோறும் இருவரை (மரபுக் கவிஞர், புதுக்கவிஞர்) தேர்ந்தெடுத்து, 'தமிழ் அகராதியியல் நாள் விழா'வின்போது தங்கப் பதக்கம், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் 'நற்றமிழ்ப் பாவலர் விருது' வழங்கி, விருதுத் தொகையாக ரூபாய் 50,000/-மும் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## 10) துறைசார் சொற்குவை வல்லுநர் குழுக் கூட்டம்

துறைவாரியாக வல்லுநர் குழுக்கூட்டம் நடத்திப் பலதுறை சார்ந்த கலைச்சொற்களைத் தொகுத்துச் சொற்குவையில் சேர்ப்பதற்கு ஏதுவாக மூன்று மாதங்களுக்கு ஒருமுறை என்ற வகையில் ஆண்டுக்கு நான்குமுறை துறைசார் வல்லுநர் குழுக்கூட்டம் நடத்தப்பட்டுவருகின்றன.

---

பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. குறள் 481

# இயல் -4
## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

### 1) தோற்றம்

சென்னையில் 1968ஆம் ஆண்டு, சனவரித் திங்களில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தோற்றம், நோக்கம், செயற்பாடு ஆகியவற்றின் முன்வரைவு குறித்து விவாதிக்கப்பட்ட பொழுது மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தோற்றம் பற்றி,

"அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் அடங்கிய ஒரு நிறுவனத்தினை நீங்கள் அமைக்க விரும்பினால் அதனை வரவேற்போரில் நான் முதல்வனாக இருப்பேன். பிரெஞ்சு அகாதெமியினைப் போன்ற (French Academy) அதனைத் தமிழ்நாட்டில் நிறுவுங்கள். பிரெஞ்சு அகாதெமி மாதிரி அஃது ஓர் இந்திய அகாதெமியாகவோ தமிழ் அகாதெமியாகவோ வளர்ந்து சிறப்பெய்தும். தமிழ் மண்ணில் நடந்து வந்துள்ள பழைய ஆராய்ச்சிகளும் மதிக்கப்பட்டுப் போற்றப்பட வேண்டும். பொதுமக்களுக்கும் பயன்படுமாறு உதவியாக இருத்தல் வரவேற்புக்குரியது" என்று கூறினார்.

---

ஞாலம் கருதினுங் கைகூடுங் காலம்
கருதி இடத்தாற் செயின். குறள் 484

பேரறிஞர் அண்ணா அவர்களின் கூற்றின்படி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1970ஆம் ஆண்டு மேனாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ்த் தோற்றுவிக்கப்பட்டது.

## 2) நோக்கம்

- உயர் தமிழாய்வினை ஊக்குவிக்கும் கல்விச் சூழலை உருவாக்குவது;
- தேவைகருதிஆராய்ச்சியாளர்களுக்குப்பயிற்சியளிப்பது;
- தமிழாய்வில் தோய்ந்த பிறநாட்டு அறிஞர்களுள் ஆர்வமுடையவர்களுடன் நெருங்கிய தொடர்பினை மேற்கொண்டு இத்துறைகளில் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல்;
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கல்விச் சூழல் பாதிக்காத வகையில் இதன் நோக்கங்களை நிறைவேற்றும் பிற கல்வி நிறுவனங்கள், அரசு அமைப்புகள், பிறநாட்டு அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியர் ஆகியோருடன் இணைந்து செயற்படுவது.
- தரமான உயராய்வு நூலகத்தைப் பேணுதல்.

---

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. குறள் 495

## 3) ஆளுகைக் குழு

தலைவர் - மாண்புமிகு தொழில் துறை, தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள்

துணைத் தலைவர்கள் – தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர், சென்னை, மதுரை, அண்ணாமலை மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள்.

உறுப்பினர்கள் - நிதித் துறைச் செயலாளர், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்ற (ஐ.ஏ.டி.ஆர்.) பிரதிநிதி ஒருவர், மைசூர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநர் மற்றும் உறுப்பினர் - செயலராக இந்நிறுவன இயக்குநர்.

## 4) செயற்படும் புலங்கள்

1. தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப் புலம்
2. தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம்
3. சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டு புலம்
4. அயல்நாட்டு தமிழர் புலம்

---

அறம் பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும். குறள் 501

## 5) செயற்பாடுகள்

தமிழ் உயராய்வு நிறுவனமாகத் திகழும் இந்நிறுவனத்தில் இலக்கியவியல், இலக்கணவியல், மொழியியல், சமூகவியல், பண்பாட்டியல், நாட்டுப்புறவியல், மொழிபெயர்ப்பியல் உள்ளிட்ட பிரிவுகளில் ஆய்வுப் பணிகளும் கல்விசார் அலுவலர்களால் தனித்தனியே திட்டப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில்,

- தமிழாய்வினை வளப்படுத்தும் வகையில் பன்னாட்டு கருத்தரங்கம், தேசியக் கருத்தரங்கம், மாநாடு மற்றும் பயிற்சிப் பட்டறை ஆகியன பிற நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளோடு இணைந்து நடத்துதல்.

- அயல்நாட்டு தமிழறிஞர்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய ஆளுமைத் தரவுத் தளத்தை உருவாக்குவதும் தமிழ்க் கலைகள், தமிழர் பண்பாடு குறித்த ஆய்வுகளையும் மேற்கொள்ளுதல்

- நாடு முழுவதும் களப்பணி வாயிலாகத் திரட்டப்படும் சுவடிகள் மற்றும் நிறுவனத்திலுள்ள பதிப்பிக்கப்படாத சுவடிகளை மின்எண்மம் செய்வது மற்றும் பதிப்புகளாக வெளியிடுதல்

- பொது இலக்கணம், சமுதாய மொழி இலக்கணம், மொழி கற்பித்தல், கணினி மொழியியல், கலைச்சொல்லாக்கம், மொழிபெயர்ப்பு ஆகிய மொழியியல் களங்களை ஆய்வு செய்தல்.

---

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். குறள் 505

## 6) ஆய்வுத் துணைமைப் பணிகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆய்வுப் பணிகளோடு ஆண்டுதோறும் வகுப்புகளும் நடத்தப்பட்டு வருவதனால் கற்பித்தல் பணியும் சிறப்புடன் மேற்கொள்ளப்படுகிறது. ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட வகுப்புகள் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழக இணைவுடன் நெறிப்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ் முதுகலைப் பட்ட வகுப்புகள், ஒருங்கிணைந்த ஐந்தாண்டுத் தமிழ் முதுகலை வகுப்புகள் தமிழ்ப் பல்கலைக்கழக இணைவுடன் நடத்தப்பட்டுவருகின்றன.

## 7) திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் சுமார் 2,500 சதுரஅடிப் பரப்பளவில் திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம் செயல்பட்டு வருகிறது. இக்காட்சி கூடத்தில் உலகப் பொதுமறையாம் திருக்குறள் மற்றும் திருவள்ளுவர் தொடர்பான அரிய புகைப்படங்கள், ஓவியங்கள், நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதிகாரத்திற்கு ஓர் ஓவியம் என 133 ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. இக் காட்சிக்கூடத்தை நாள்தோறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், வெளிநாட்டினர் ஆகியோர் கண்டுகளித்து வருகின்றனர். இதுவரை 7000க்கும் அதிகமான

---

தேரான் தெளிவும் தெளிந்தான் கண்ஐயுறவும்
தீரா இடும்பை தரும். குறள் 510

பார்வையாளர்கள் இக் காட்சிக்கூடத்தினைக் கண்டு பயனடைந்துள்ளனர். மேலும், இக்காட்சிக்கூடத்தின் வாயிலாகத் திருக்குறள் முற்றோதல் பயிற்சி, பேச்சு போட்டி, கட்டுரை போட்டி, ஓவியப் பயிற்சி ஆகியன ஆண்டுதோறும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

## 8) திருக்குறள் ஓவியப் போட்டி

திருக்குறளில் அமைந்த அறநெறிக் கருத்துகள் பொதுமக்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு எளிதில் சென்றடையும் வகையில் ஆண்டுதோறும் திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம் வழியாகத் திருக்குறள் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## 9) உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம்

அயலகத்தமிழர்தொடர்பானஅனைத்துத்தகவல்களையும் அயலகத் தமிழ் அறிஞர்களுடன் தொடர்புகொண்டு அவற்றைப் பெற்று ஒருங்கே கிடைக்கும் வண்ணம் அரசின் நிதியுதவியுடன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் "உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம்" தோற்றுவிக்கப்பட்டது.

இம் மையத்தின் வழியாக ஆண்டுதோறும் பன்னாட்டு கருத்தரங்கம், பயிலரங்கம், அயல்நாட்டு தமிழறிஞர்களைக்

---

பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல். குறள் 526

கொண்டு சிறப்பு சொற்பொழிவுகள், பயிற்சிப் பட்டறைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

## 10) ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்

பழங்காலத் தமிழ்ச் சுவடிகளைப் பாதுகாக்கும் வகையிலும் நம் முன்னோர்களின் அறிவுக் கருவூலமாக விளங்கும் சுவடிகளைப் பாதுகாத்துப் பேணிடும் வகையிலும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அரசு நல்கையில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம் அமைக்கப்பட்டது. இச்சுவடிகள் பாதுகாப்பு மையத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவம், இலக்கணம், இலக்கியம், செய்யுள், காலக்கணிதம், காலச்சுவடுகள், தனிப்பாடல்கள், தனிக்குறிப்புகள் போன்ற தலைப்புகளில் ஓலைச்சுவடிக் கட்டுகளும், நூற்றுக்கும் மேற்பட்ட தாள் சுவடிகளும் திரட்டிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள அனைத்துச் சுவடிக் கட்டுகளுக்கும் விரிவான விளக்க அட்டவணை உருவாக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும், தமிழ்நாடு அரசின் நிதிநல்கையைக் கொண்டு, தமிழகத்திலும் பிற இடங்களிலும் உள்ள பாதுகாக்கப்படாத சுவடிகளைக் களப்பணி வாயிலாக அடையாளங்கண்டு அவற்றை மின் எண்மம் செய்து இம் மையத்தால் பாதுகாத்து வரப்படுகிறது.

---

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். குறள் 547

## 11) பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்

பழந்தமிழர்களின் சிறப்புகளைப் பார்போற்றும் வண்ணம் பல்வேறு காட்சி அமைப்புகளைக் கொண்டு காண்போர் வியக்கும் வண்ணம் கற்சிற்பங்கள், உலோகச் சிற்பங்கள், மரச் சிற்பங்கள், அணிகலன்கள், புடைப்பு ஓவியங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம் அரசின் சிறப்பு நல்கையைக் கொண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக் காட்சிக்கூடத்தில் சிறந்த தொழில்நுட்ப வசதிகளோடு அமைக்கப்பட்டுள்ள தமிழ்த்தாய் ஊடக அரங்கில் பார்வையாளர்களைக் கவரும் வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் பழந்தமிழர் வாழ்வியல், தமிழ் மருத்துவம், நீர்மேலாண்மை, போரியல், ஆட்சித்திறன், பழந்தமிழர் நெசவுத் தொழில்நுட்பம், பழந்தமிழர் கட்டடக்கலை நுட்பம், பழந்தமிழர் ஐந்திணை வாழ்வியல், பழந்தமிழர் வேளாண்மை, தமிழர் மரபுக் கலைகள் ஆகிய தலைப்புகளில் குறும்படங்கள் தயாரிக்கப்பட்டுப் பார்வையாளர்களுக்குத் திரையிடப்பட்டு வருகின்றன.

---

நாடொறும் நாடிமுறை செய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும். குறள் 553

## 12) ஆய்வு இருக்கைகள்

தமிழ்நாடு அரசின் சார்பிலும் தனியாரின் கொடையாலும் உயர் தமிழாய்வுகளை மேலும் சிறப்புடன் மேற்கொள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 15 ஆய்விருக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 13) அறக்கட்டளைகள்

நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ள 53 அறக்கட்டளைகள் மூலம் இதுவரை 555 சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இவ்வாண்டில் 51 அறக்கட்டளை சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டு நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

## 14) நூல் வெளியீடுகள்

நிறுவனத்தின் ஆய்வுப் பணிகள் தமிழார்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பிறநாட்டவர்களுக்கும் பெரும் உறுதுணையாக அமைந்துள்ளது. நிறுவனத்தில் நடைபெறும் திட்டப்பணிகள், தமிழறிஞர்களின் தமிழாய்வுப் பணிகள், பன்னாட்டு/தேசியக் கருத்தரங்குகள், சிறப்புச் சொற்பொழிவுகள், அரிய நூல்கள் ஆகியன நிறுவனத்தின் வாயிலாக ஆண்டுதோறும் வெளியிடப்பட்டுவருகிறது.

நிறுவனத்தால் வெளியிடப்படும் நூல்கள் இலக்கணம், இலக்கியம், தமிழாய்வு, மொழிபெயர்ப்பு, தமிழ் மருத்துவம்,

---

இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். குறள் 558

காலக்கணிதம் ஆகிய பொருண்மைகளில் அமைந்துள்ளன. இதுவரை ஏறத்தாழ 1250க்கும் மேற்பட்ட தரமான ஆய்வு நூல்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

## 15) தமிழியல் - ஆய்விதழ்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உருவாகுவதற்குக் களம் அமைத்துக்கொடுத்த சேவியர் தனிநாயகம் அடிகளாரால் அறிமுகப்படுத்தப்பட்டது Journal of Tamil Studies (JOTS) எனும் ஆங்கிலத்தில் அமைந்த இதழ். அவர் வழங்கிய கொடைதான் இன்று "தமிழியல்" எனும் பெயரில் ஆங்கிலம் மற்றும் தமிழ் என இருமொழியில் காலாண்டு இதழாக இதுவரை 50 ஆண்டுகளாக 109 இதழ்கள் வெளிவந்துள்ளன. இவற்றில் ஆராய்ச்சிக் கட்டுரைகள், நூல் மதிப்புரைகள், நிறுவன வெளியீடுகளின் அறிமுகம் ஆகியவை இடம் பெறுகின்றன.

## 16) ஆய்வுப் பட்ட வகுப்புகள்

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் மற்றும் சென்னைப் பல்கலைக்கழக ஏற்புடன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முழுநேர மற்றும் பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 232 மாணவர்கள் முனைவர் பட்டமும், 374 மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றுள்ளனர்.

---

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். குறள் 559

## 17) முதுகலைப் பட்டப் படிப்புகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புடன் தமிழ் முதுகலை வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

இந்நிறுவனத்தில் ஒருங்கிணைந்த முதுகலை 5 ஆண்டுப் படிப்பினைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புடன் தொடங்கி நடத்தப்பட்டுவருகிறது.

## 18) பட்டய வகுப்புகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சார்பில் தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பும், திருக்குறள் ஓவியக்காட்சிக் கூடம் ஒருங்கிணைப்புடன் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் ஓர் ஆண்டு பட்டயப் படிப்புகளும் நடத்தப்பட்டுவருகின்றன.

மேலும், ஆய்விருக்கைகளின் வாயிலாகத் திருமந்திரமும் வாழ்வியலும், திருவாசகமும் வாழ்வியலும், செம்பொருட்டுணிவு ஆகிய பட்டய வகுப்புகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கல்வியாண்டில் சுவடியியல் மற்றும் பதிப்பியலில் 43 மாணவர்களும், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் பட்டயப் படிப்பில் 225 மாணவர்களும், திருமந்திரமும்

---

எண்ணிய எண்ணியாங்கு எய்து எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின். குறள் 666

வாழ்வியலும் வகுப்பில் 50 மாணவர்களும், செம்பொருட்டுணிவில் 36 மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

## 19) விரிவுரையாளர் / ஆராய்ச்சிக்கான தகுதித்தேர்வுகள் பயிற்சி

பல்கலைக்கழக நல்கைக் குழுவால் நடத்தப்பெறும் விரிவுரையாளர் / ஆராய்ச்சியாளர் தகுதித் தேர்வுக்கான சிறப்புப்பயிற்சிவகுப்புகள் உலகத்தமிழாராய்ச்சிநிறுவனத்தில் கட்டணமின்றி ஆண்டுதோறும் நடத்தப் பெற்று வருகின்றன. இவ்வகுப்பில் நிறுவன மாணவர்கள் மட்டுமன்றிப் பிற கல்லூரி,பல்கலைக்கழக மாணவர்களும் சேர்ந்து பயனடைந்து வருகின்றனர். இதுவரை 450 மாணவர்கள் இவ்வகுப்பின் மூலம் பயனடைந்துள்ளனர்.

---

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. குறள் 669

## இயல் – 5
## தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

### 1) தோரணவாயில்

**அடலேறு மொழித்தமிழே – இன்பக்**
**கடலேறு மலைத்தமிழே – சோலை**
**மடலேறு சுவைத்தமிழே- நீ என்**
**உடலேறி உயிரை வாழ்விக்கின்றாய்!**

என்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வாக்கிற்கு ஏற்ப, உயிரோடும் உணர்வோடும் கலந்த தமிழுக்கென்று உருவாக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகம் உலகத் தமிழர்களின் அடையாளமாக விளங்கித் தமிழை உலகெங்கும் பரவச் செய்யும் பணியைச் செவ்வனே செய்துவருகிறது.

### 2) தொடக்கம்

நெற்களஞ்சியமான தஞ்சாவூரில் சொற்களஞ்சியமான தமிழ்ப் பல்கலைக்கழகம் 1981 செப்டம்பர் 15-இல் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளில் தொடங்கப்பட்டது. 825 ஏக்கர் பரப்பளவில் 43,868 சதுரமீட்டர் கட்டடப் பரப்புடன் பசுமையுடன் அமைந்துள்ளது. தமிழுக்கென உருவாக்கப்பெற்ற இப் பல்கலைக்கழகம் 40 ஆண்டுகளை நிறைவுசெய்துள்ளது. 5 புலங்களாக, 26 துறைகளை

---

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. குறள் 672

உள்ளடக்கித்தமிழ்வளர்ச்சிப்பணியில்தமிழ்ப்பல்கலைக்கழகம் ஈடுபட்டு வருகிறது. இவற்றுடன் அச்சகம், பதிப்புத்துறை, நூலகம், அருங்காட்சியகம், பெருஞ்சொல்லகராதித் திட்டம், தமிழ்ப் பண்பாட்டு மையம், தமிழ் வளர்மையம் உள்ளிட்ட திட்டங்கள் பிரிவுகள் வழியாகவும் இப் பல்கலைக்கழகம் சிறப்பாக இயங்கிக்கொண்டு வருகிறது.

பல்கலைக்கழக மானியக்குழு ரூபாய் 2.00 கோடி நிதியுதவி அளித்ததன் அடிப்படையில் உலகச் செம்மொழிகள் அனைத்திற்கும் ஓர் உயராய்வு மையம் 27.07.2010 அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. இம்மையத்தின் வழியாக உலகச் செம்மொழிகள் முதலாக மூன்று நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கோவையில் சூன் 2010-இல் நடைபெற்ற உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கான ஆய்வரங்கப் பணிகளைத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியாளர்கள் ஏற்று நடத்தினர்.

3) **நோக்கங்கள்**

- தமிழரின் பண்டைய வரலாற்று சிறப்பினை எடுத்துக்காட்டும் தரவுகளாகச் செவ்விலக்கியங்கள் திகழ்கின்றன என்பதனை அறிவியல் வழிப்பட்ட ஆய்வுகளின் வாயிலாக நிறுவுவது;

---

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். குறள் 676

❖ பண்டைத் தமிழர்கள் வாழ்ந்த வாழ்வியல் பகுதிகளை அகழாய்விற்கு உட்படுத்தித் தமிழரின் வரலாற்றைப் புதிதாகக் கட்டமைப்பது;

❖ தமிழரின் மரபு வழியான மருத்துவ முறைகளை மீட்டெடுத்தல் மற்றும் இன்றைய மருத்துவ உலகிற்குச் சித்த மருத்துவம் மூலம் புதிய மருந்துகளைக் கண்டுபிடித்து வழங்குவது;

❖ தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் மொழிபெயர்த்து வழங்குவது. பிற மொழிகளின் சிறந்த கலை இலக்கியங்களைத் தமிழ்மொழிக்கு மொழியாக்கம் செய்வது;

❖ தமிழரின் அறிவுச்செல்வங்களான ஓலைச்சுவடிகளையும் அரிய கையெழுத்துச் சுவடிகளையும் மரபுசார் முறைகளில் பாதுகாத்து, அவற்றைச் செம்மையான முறைகளில் பதிப்பித்து வெளியிடுவது;

❖ தாய்த் தமிழகத்துடன் நெடுங்காலப் பண்பாட்டு உறவுகளை வைத்துள்ள அயலகத் தமிழர்களின் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் பாதுகாப்பையும் வளர்ச்சியையும் உறுதிசெய்வது முதலானவை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தலையாய நோக்கங்களாகும்.

---

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல். குறள் 679

## 4) புலங்கள் – துறைகள்

பன்முக நோக்கில் தமிழின் பெருமைகளை உயராய்வுகளாகக் கொண்டு செலுத்தும் உட்கட்டமைப்பில் கலைப் புலம், சுவடிப் புலம், வளர்தமிழ்ப் புலம், மொழிப் புலம், அறிவியல் புலம் ஆகிய ஐந்து புலங்களில் 26 துறைகள் உள்ளன.

தமிழ்ப் பண்பாட்டு மையம், தமிழ் வளர் மையம் உள்ளிட்ட மையங்களின் வாயிலாகத் தமிழ் மொழி, பண்பாட்டு பரவலாக்கப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

## 5) கல்விப் பணி

### மாணவர் சேர்க்கை முறை

அரசு விதிகளுக்கிணங்க மாணவர்களின் சேர்க்கை நடைபெறுவதற்கு ஏதுவாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சேர்க்கைப் பிரிவு செயல்பட்டுவருகிறது. முதுநிலையில் கலை, அறிவியல் இளங்கல்வியியல், ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுகலை, கல்வியியல் நிறைஞர், ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வுப் படிப்புகளுடன், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளிலும் மாணவர்கள் சேர்ந்து பயின்று வருகின்றனர்.

---

அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று. குறள் 682

## 6) ஆய்வுப்பணிகளும் திட்டங்களும்

பல்கலைக்கழகத்திலுள்ள ஆசிரியர்கள் கற்பித்தல் பணிகளோடு தங்களின் செயற்பாட்டை ஆய்வுப் பணிகளிலும் விரிவுபடுத்தியுள்ளனர். குறிப்பாக, பல்கலைக்கழக நல்கைக்குழு, பிற நிறுவனங்களின் நல்கை உதவியுடன் பெருந்திட்ட / குறுந்திட்ட ஆய்வுப் பணிகளைப் பல்வேறு துறைகளைச் சார்ந்த ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

- தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையில் உள்ள ஓலைச்சுவடிகளைப் பராமரித்துப் பாதுகாக்க, புதுதில்லி தேசியச் சுவடிகள் இயக்ககம் (NMM) என்ற ஒன்றிய அரசு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி சுவடிகள் பாதுகாப்பு மையம் (MCC) அமைக்க ஆண்டுதோறும் ரூபாய் 7.00 இலட்சம் வீதம் மூன்றாண்டுகளுக்கு ரூபாய் 21.00 இலட்சம் புதுதில்லி தேசியச் சுவடிகள் இயக்ககம் (NMM) அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை ரூபாய் 10.00 இலட்சம் பெறப்பட்டு, தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சுவடிகள் பாதுகாப்பு மையம் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

---

நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு. குறள் 683

- தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையில் இணைப்பேராசிரியரை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு ஓலைச்சுவடித்துறையும் இலண்டன் பிரிட்டிஷ் நூலகமும் இணைந்து "Digitization, Cataloging and Preservation of Palmleaf Manuscripts in the Tamil University" எனும் EAP (Endangered Archives Program) திட்டம் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்கு 51,040 பவுண்ட் அனுமதிக்கப்பட்டு (ஏறத்தாழ ரூபாய் 49.00 இலட்சம்) முதல் தவணையாக 20,391 பவுண்ட் (இந்திய மதிப்பு ரூபாய் 18,41,850.20/-) இரண்டாம் தவணையாக 12,735 பவுண்ட் (இந்திய மதிப்பு ரூபாய் 13,10,304.90/-) தொகை வரப்பெற்றுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- தமிழ்ப் பல்கலைக்கழகத் தொழில் மற்றும் நில அறிவியல் துறை வாயிலாக, புதுடெல்லியில் உள்ள இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கழகம் (DST) அனுமதித்துள்ள நல்கை ரூபாய் 39.52 இலட்சம். அதில் முதல் தவணையாக ரூபாய் 13.68 இலட்சம் பெறப்பட்டு "Digital-Poompuhar" Network Project on Digital Reconstruction of underwater Heritage site-Poompuhar என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

---

கடனறிந்து காலங் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை. குறள் 687

## 7) தமிழ்ப் பண்பாட்டு மையம்

தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாத்து உலகெங்கும் பரப்புவதற்குத் தமிழ்ப் பண்பாட்டு மையம் வாயிலாக இசை மற்றும் நாட்டியத்தில் பாடங்கள் நடத்துவதற்கு 39 வெளிநாட்டு / உள்நாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஒன்று முதல் எட்டுப் படிநிலைக்குரிய பாடங்கள் (Syllabus) தயாரிக்கப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. 1302 மாணவர்கள் சேர்க்கை செய்யப் பெற்றுள்ளனர். புதிய ஒப்பந்தம், மாணவர் சேர்க்கை, தேர்வு உள்ளிட்ட தொடர் பணிகள் கொரோனா தீநுண்மி பெருந்தொற்றுக் காரணமாக இணையவழியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மரபுக் கலைகளான தப்பாட்டம், கரகாட்டம், சிலம்பாட்டம் உள்ளிட்டவற்றிற்குப் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 8) தமிழ் வளர் மையம்

உலகளவில் தமிழ் மொழியினைப் பரப்புவதற்காகவும், அதனைப் பாதுகாக்கவும் தமிழ் மொழியினை உலகெங்கும் கொண்டு செல்லும் வகையில் தமிழ் வளர் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

---

மன்னர் விழைப விழையாமை மன்னரால்
மன்னிய ஆக்கந் தரும். குறள் 692

ஐந்து வெளிநாடு மற்றும் ஓர் உள்நாட்டு நிறுவனம் மொத்தம் ஆறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு மாணவர் சேர்க்கைக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குவகாத்தி பல்கலைக்கழகத்தின் நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கியப் பயில்துறையில் (தமிழ் மொழி) அஸ்ஸாம் மொழி மற்றும் தமிழ் மொழி தெரிந்த ஆசிரியர் ஒருவரை நியமனம் செய்து, மாணவர்களுக்குத் தமிழ் மொழி பயிற்றுவிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவின் 'வணக்கம் மலேசியா' நிறுவன அனைத்துலக மாணவர் முழக்கம் என்னும் அமைப்பும், தமிழ் வளர் மையமும் இணைந்து பேச்சுப் போட்டிகள் இணையவழியில் நடத்தப்பட்டன.

தமிழ் வளர் மையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள அமெரிக்கா, டெக்ஸாஸ் நகரின் எட்யுரைட் நிறுவனம், அமெரிக்கத் தமிழாசிரியர்களுக்குத் தமிழ் மொழி இலக்கிய இலக்கணப் பயிற்சிக்கான புத்தொளிப் பயிற்சி வகுப்பினைத் தமிழ் வளர் மையத்துடன் இணைந்து இணையவழியே நடத்தியுள்ளது.

---

போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது. குறள் 693

## 9) நூல் விற்பனை

தமிழ்ப் பல்கலைக்கழக விற்பனைப் பிரிவிலும், ஒவ்வோர் ஆண்டும் ஈரோடு மற்றும் சென்னையில் நடைபெறும் புத்தகக்கண்காட்சிகளிலும் நூல்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

ஆண்டுதோறும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான பல்கலைக்கழக நிறுவன நாள் விழாவின் அன்றும் சித்திரை முதல் நாள் அன்றும் ஆய்வாளர்களும், அறிஞர்களும், ஆசிரியப் பெருமக்களும், மாணவர்களும், பொதுமக்களும் பயன்பெறும் வகையில் 50 விழுக்காடு கழிவு விலையில் நூல்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள், பணியாளர்கள், ஆய்வாளர்கள் ஒருமுறை அனைத்து நூல்களையும் 50 விழுக்காடு கழிவு விலையில் பெற்றுக்கொள்ளும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அச்சகத்தின் வழியாகத் தொலைநிலைக்கல்விப் பாட நூல்கள் தொடர்ந்து அச்சிடப்பட்டு வருகின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழகச் செய்திமலர் புத்துயிர்ப்போடு பல்கலைக்கழக ஆராய்ச்சி செயன்மையை, உலகுக்கு

---

குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல். குறள் 696

உரக்க அறிவிக்க 'தமிழி' எனும் அடையாளப்பெயருடன் காலாண்டு இதழாக வெளிவருகிறது.

### 10) முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம் நூலகம்

தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் 1,88,458 நூல்கள் உள்ளன. இவற்றை மாணவர்கள், ஆய்வாளர்கள், பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

---

பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும். குறள் 700

## இயல் – 6

# உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## 1) தோற்றம்

வானம் அறிந்ததனைத்தும் அறிந்து வளர்மொழியான அன்னைத் தமிழ்மொழியை அகிலமெங்கும் அறியச் செய்யும் உலகத் தமிழர்களையும் உலகத் தமிழ் அமைப்புகளையும் ஒருங்கிணைத்து ஒரு குடையின் கீழ்க்கொண்டு வருவதை முதன்மையான நோக்கமாகக் கொண்டு சங்கங்கள் முகிழ்த்துத் தமிழ் வளர்த்த மாநகர் மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் 1986இல் தொடங்கப்பெற்றது. உலகத் தமிழ்ச் சங்கத்திற்கென மதுரை தல்லாகுளம் பகுதியில் 14.15 ஏக்கர் பரப்பளவில் 87,300 சதுரஅடியில் வானளாவிய கட்டடம் கட்டி முடிக்கப்பெற்றது.

மதுரையின் தனித்த அடையாளங்களில் ஒன்றான உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடம் ரூபாய் 37.25 கோடி மதிப்பில் கட்டப்பெற்று, உள்கட்டமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வளாகத்தில் இரண்டு கூட்ட அரங்குகள், நிருவாகப்பிரிவு, ஆய்வுப் பிரிவு, நூலகம், வகுப்பறைகள், கருத்தரங்க அறை, நிருவாகக்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்ட அரங்கம், 400 பேர் அமரக்கூடிய வகையில் கலையரங்கம், விருந்தினர் தங்கும் அறைகள்

---

குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்<br>
யாது கொடுத்தும் கொளல். குறள் 703

உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன. கட்டடத்திற்கு முன்பக்கச் சுற்றுச்சுவரில் திருக்குறள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் பதிக்கப்பட்டுள்ளன. தமிழறிஞர்களும் ஆய்வுமாணவர்களும் பயன்பெறும் வகையில் 25,000க்கும் மேற்பட்ட நூல்களுடனும் குளிர்சாதன வசதியுடனும் நூலகம் அமைக்கப்பெற்று, பராமரிக்கப்பட்டு வருகின்றது. உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகம் பசுமை போர்த்திய சுற்றுச்சூழலுடன் திகழும் வண்ணம் 500க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பெற்று, பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய பொலிவுமிகு வளாகத்தைப் பார்வையிடுவதற்காகவும் இங்கு நடைபெறுகின்ற இலக்கியக் கருத்தரங்க நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காகவும் அயல்நாட்டு தமிழறிஞர்கள், பிற மாநிலத் தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் ஆர்வத்தோடு வருகைபுரிந்து வருகின்றனர்.

மதுரையின் பெருமைக்குப் பெருமை சேர்க்கும் விதமாகத் தமிழுக்கென்று தனியிடமாக அமையப்பெற்று, அய்யன் திருவள்ளுவர் சிலையினை முகப்பில் தாங்கி உலகத் தமிழர்களின் வேடந்தாங்கலாக உலகத் தமிழ்ச் சங்கம் வீற்றிருக்கிறது.

---

முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின். குறள் 708

2) **சங்க அமைப்பு நோக்கம்**

- தமிழுக்குத் தொண்டாற்றி வரும் தமிழ் அமைப்புகள், சங்கங்கள், நிறுவனங்கள், ஆய்வு மையங்கள் முதலியவற்றின் விவரங்களைப் பதிவு செய்து அவற்றின் பணிகளைத் தொகுத்தல்.
- தனித்தனியே தன் பணிகளைச் சீரிய நோக்கத்துடன் நிறைவேற்றி வருகின்ற உலகத் தமிழ் அமைப்புகளை ஒரு குடையின் கீழ்க்கொண்டு வருதல் மற்றும் கூட்டமைப்பை உருவாக்குதல்.
- அயலக வாழ் தமிழர்களின் வாழ்வியலையும் இலக்கியப் பணிகளையும் தொகுத்தளித்தல்.
- அயலகத் தமிழர்கள் குறித்த தகவல் களஞ்சியம் தயாரித்து வெளியிடுதல்.
- மலேசியா,சிங்கப்பூர்,இலங்கை,தென்னாப்பிரிக்கா,பிஜி, மொரிசியசு, பிரெஞ்சுகயானா, அமெரிக்கா, பிரான்சு, ஆசுதிரேலியா,நியூசிலாந்து,குவைத் ஆகியநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் தமிழர்களுக்கு மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டு அடிப்படையிலான உதவிகளை அளித்தல்.
- பழந்தமிழ் இலக்கியங்களையும் தமிழரின் தனித்த பண்பாட்டு அடையாளங்களையும் அயலகத் தமிழர்கள்

---

அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல். குறள் 713

அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகளை இணையவழி உருவாக்கித் தருதல்.

- ❖ உலக நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சி மையம், இருக்கைகளை அமைக்கும் பணிகளை முன்னெடுத்துச் செல்லுதல்.

### 3) சங்கத் தமிழரின் வாழ்வியலை வரும் தலைமுறையினரும் அறியும் வகையில் சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம்

"மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்" என்ற மதுரைக்காஞ்சியின் பாடல் வரிகளுக்கிணங்க பேறுபெற்ற மதுரையில் சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம் அமைக்கப் பெற்றுள்ளது. சங்கத் தமிழரின் வீரம், கொடை, பண்பாட்டு சிறப்பினை உலகிற்கு எடுத்துரைப்பன சங்க இலக்கியங்களே. சங்கத் தமிழரின் காதல், வீரம், போர்முறைகள், அறம் என வாழ்க்கைமுறைகளை எடுத்துரைத்துத் தமிழ்ச் சமூகத்தின் பெருமையைப் பறைசாற்றுவதாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. இதனை இன்றைய தலைமுறையினரும் உலகினரும் அறிந்து தெளியும் வண்ணம் தூங்கா நகரமான மாமதுரையில் சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம் கட்டி முடிக்கப்பெற்றுப் பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

---

கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லார் அகத்து. குறள் 717

சங்கத் தமிழரின் மனிதநேயம், கொடை, நட்பு, இறைச்சிந்தனை, இயற்கையைப் பேணுதல், பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல், தன்மான உணர்வு, நீதிவழுவாமை உள்ளிட்ட பண்பாட்டு அடையாளங்களை உணர்ந்து கொள்ளும் வகையில் ஓவியங்கள், சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள், கற்சிற்பங்கள், பழந்தமிழர் வாழ்வியல் பற்றிய கல்வெட்டுகள், புகைப்படங்கள் எனக் கலைப்பொருள்களைத் தன்னகத்தே கொண்டு சங்கத் தமிழ் காட்சிக்கூடம் அமையப் பெற்றுள்ளது. ஏராளமான அயலகத் தமிழறிஞர்கள், பிற மாநிலத்தவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் இக்காட்சிக்கூடத்தைப் பார்வையிட்டுத் தமிழரின் பெருமையைக் கண்டு வியந்து போற்றுகின்றனர்.

## 4) இலக்கியத்தை ஆராய்ந்து தெளியத் தமிழ்க்கூடல்

மூதூர் மதுரை அன்றும் இன்றும் என்றும் தமிழோடு இயைந்து விளங்கி வருகின்றது. உலகத் தமிழ்ச் சங்கத்தில் சங்கக் கால இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை தமிழாய்ந்து பேசும் அறிஞர்கள் ஒன்று கூடும் நிகழ்வு வாரந்தோறும் 'தமிழ்க்கூடல்' என்னும் பெயரில் இணையவழியில் நடத்தப்பெற்று வருகின்றது.

---

ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு. குறள் 725

## 5) இணையவழி நிகழ்வுகள்

கொரோனா-19 தீநுண்மி காரணமாக ஏற்பட்ட பொது முடக்கக் காலத்திலும் உலகத் தமிழ்ச் சங்கத்தின் பணிகள் தொய்வின்றித் தொடரும் வகையில் மலேசியா, ஆசுதிரேலியா, சிங்கப்பூர், அயர்லாந்து, இலங்கை, கொரியா, கனடா, இங்கிலாந்து, ஓமன், துபாய், இந்தோனேசியா, வியட்நாம், கம்போடியா, நார்வே, பிரான்சு, ஜெர்மனி, இங்கிலாந்து, ஹாங்காங் ஆகிய 18 நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகள், தமிழறிஞர்களுடன் இணைந்து 130 நாள்கள் இணையவழி நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன. அவ்வகையில் 7 ஆய்வரங்குகள், 29 இணையத் தமிழ்க்கூடல்கள், 6 பன்னாட்டு கருத்தரங்கங்கள், 1 தேசியக் கருத்தரங்கம், 1 பன்னாட்டு திறன்வழிப் பயிலரங்கம், 5 பன்னாட்டு கவியரங்கங்கள், 3 சிறப்புப் பன்னாட்டு உரையரங்குகள் ஆகிய இணையவழி நிகழ்வுகள் நடத்தப்பெற்றுள்ளன.

## 6) தரமான நூல்களைத் தரணி அறிந்திட நூல் அரங்கேற்றம்

பொதுமறை அரங்கேற்றிய மாமதுரையில் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் தரமான நூல்களைத் திங்கள்தோறும் அரங்கேற்றம் செய்யும் பணியினை உலகத் தமிழ்ச் சங்கம் மேற்கொண்டு வருகிறது.

---

கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்தும்
நல்லா ரவையஞ்சு வார். குறள் 729

## 7) உலகத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினர் சேர்க்கை

தமிழறிஞர்களுடனும் தமிழ் ஆர்வலர்களுடனும் ஒரு தமிழ் சார்ந்த நல்லுறவை உருவாக்கும் வண்ணம் உலகத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினர்கள் நாள்தோறும் சேர்க்கப்பட்டு வருகின்றனர். உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையில் இதுநாள் வரை 2150க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

## 8) வளரும் அறக்கட்டளைகள்

உலகத் தமிழ்ச் சங்கத்தில் ஐந்து அறக்கட்டளைகள் நிறுவப்பட்டு ஆண்டுதோறும் சொற்பொழிவுகள் நடத்தப்பெற்று வருகின்றன.

## 9) அயலகத் தமிழர்களின் படைப்புகளின் அணிவரிசை

அயலகத்தில் வாழும் தமிழ்ப் படைப்பாளிகளின் படைப்புகளைத் தமிழகத் தமிழறிஞர்கள், ஆய்வு மாணவர்கள் கற்றுப் பயன்பெறுமாறும் அவர்களது ஆய்வுகளுக்கு உறுதுணையாகவும் அயல்நாடுகளில் வாழும் தமிழர்களின் படைப்புகளைப் புதினம், சிறுகதை, கவிதை, கட்டுரை மற்றும் நாடகங்கள் எனப் பிரித்துத் தொகுத்துக் களஞ்சியமாக வெளியிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 1125 நூல்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

---

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு. குறள் 734

## 10) அயலகத் தமிழ் இதழ்கள், மின்னிதழ்கள் படித்து அறிய

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அந்நிலப்பரப்பில் வாழும் தமிழ் மக்களோடு தொடர்புகொள்ள, படைப்புத்திறனை வெளிப்படுத்த, கருத்துப் பரிமாற்றத்திற்காக அறிதல், அறிவுறுத்தல், அறிவித்தல் முதலியவற்றிற்காக இதழ்களைத் தோற்றுவித்துக் கொள்கின்றனர். தமிழர்கள் குடியேறி வாழ்ந்து வரும் நாடுகளில் வெளியாகும் இதழ்கள், மின்னிதழ்களைக் கண்டறிந்து வரிசைப்படுத்தி ஆவணப்படுத்தும் பணிகள் உலகத் தமிழ்ச் சங்கத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 823 இதழ்கள் கட்டமைக்கப்பட்டு அயலகத் தமிழ் இதழ்களுக்கென உலகத் தமிழ்ச் சங்க நூலகத்தில் தனிப்பிரிவு ஏற்படுத்தி அவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அயலகத் தமிழ் இதழ்கள், மின்னிதழ்கள் குறித்த தரவுகளைக் காலவரிசைப்படுத்தி, வகைப்படுத்திக் களஞ்சியமாக வெளியிடுதல், உலகத் தமிழ்ச் சங்க வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்தல் உள்ளிட்ட பணிகள் நடைபெறுகின்றன.

## 11) அயலகத் தமிழ் நூல்களைக் கொண்டாடச் சிறந்த நூல் பரிசு

தமிழகம் மட்டுமல்லாது உலகளாவிய அளவில் தமிழ்ப் படைப்பாளர்கள் பரவிக்கிடக்கின்றனர். ஆசியா,

---

கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை. குறள் 736

அமெரிக்கா, ஐரோப்பா, ஆசுதிரேலியா, ஆப்பிரிக்கா ஆகிய ஐந்து கண்டங்களிலுள்ள நாடுகளில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்குத் துணைபுரியும் வகையில் கவிதை, சிறுகதை, புதினம், ஆய்வு நூல் ஆகிய 4 பிரிவுகளில் வெளிவரும் தரமான படைப்புகளுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன.

## 12) நூல் விற்பனை

உலகத் தமிழ்ச் சங்கம் சார்பில் நடைபெற்ற கருத்தரங்குகளின் கட்டுரைகள் தொகுத்து நூலாக்கம் செய்யப்பட்டுள்ளன. அதில் 21 நூல்கள் தற்போது விலை நிருணயம் செய்யப்பட்டு விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு வருகைதருபவர்கள் நூல்களை வாங்குவதற்கு வாய்ப்பாகத் தகவல் மையத்தில் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பெற்றுள்ளன.

## 13) உலகத்தமிழ்ப் பன்னாட்டு மின் ஆய்விதழ்

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை உலகெங்கும் பரவி வாழும் தமிழர்களை ஒன்றிணைக்கும் இலக்கினை அடையும் பயணத்தில் ஒரு கருவியாக 'உலகத்தமிழ்' பன்னாட்டு மின் ஆய்விதழைக் காலாண்டிற்கொருமுறை வெளியிடப்பெற்று வருகிறது. இதுநாள் வரை 13 காலாண்டிதழ்கள் வெளிவந்துள்ளன.

---

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு. குறள் 737

## இயல் -7

## செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சீரிய முயற்சியினால் 2004-இல் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. 2006 முதல் மைசூரிலுள்ள இந்திய மொழிகளுக்கான மையத்தின் ஓர் அங்கமாகச் செயற்பட்டு வந்தது. 2008 முதல் தன்னாட்சி நிறுவனமாக இந்நிறுவனம் சென்னையில் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசால் இந்நிறுவனத்திற்கெனப் புதிய கட்டடம் கட்டுவதற்குத் தோராயமாக 17 (16.58 ஏக்கர்) ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒன்றிய அரசின் நல்கையுடன் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவுறும் தறுவாயில் உள்ளன.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இந்திய ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தின் கீழ்ச் செயல்பட்டு வரும் தன்னாட்சி நிறுவனமாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவராவார். ஆட்சிக்குழு நிதிக்குழு மற்றும் கல்விக்குழுவால் நிறுவனத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிறுவனமானது கி.பி.600-க்கு முந்தைய காலத்தைச் செவ்வியல் காலமாகக் கொண்டு பண்டைத் தமிழ்ச் சமூகம் பற்றிய ஆய்வை நிகழ்த்தும் வகையில் செயல்பட்டு வருகிறது.

---

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு. குறள் 739

பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் எல்லாக் கூறுகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாப்பதை இந்நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழின் தொன்மை,தனித்தன்மை,தமிழர்களின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் சிறப்புகளைக் கவனத்தில் கொண்டு பின்வருவனவற்றை முதன்மையான குறிக்கோளாக இந்நிறுவனம் கொண்டுள்ளது.

- இந்தியப் பண்பாட்டின் பன்முக இயல்பு பற்றியும், இந்தியப் பண்பாட்டிலும் மரபிலும் தமிழியக் கூறுகளின் பங்களிப்புப் பற்றியும் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கு ஊக்கமளித்து மேம்படுத்துதல்.
- பல்துறை சார்ந்த அறிஞர்களை ஒருங்கிணைத்துத் தமிழின் தொன்மை குறித்து ஆராய்தல்.
- தமிழ் பிற திராவிட மொழிகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறித்து ஆய்வு செய்தல்.
- திராவிட மொழிகளின் வரலாற்று ஒப்பாய்வையும், வரலாற்று முறையில் தமிழ் வழக்காறுகள் குறித்த ஆய்வையும் மேற்கொள்ளுதல்.
- 41 செவ்வியல் தமிழ் நூல்களையும் உலக மொழிகளிலும், இந்திய மொழிகளிலும் மொழி பெயர்த்து வெளியிடுதல்.

---

ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள். குறள் 741

- செவ்வியல் காலத்திற்குட்பட்ட 41 நூல்களையும் சுவடிகள், பழம்பதிப்புகள், உரைமேற்கோள்கள் கொண்டுஒப்பிட்டுமரபுவழிமூலபாடச்செம்பதிப்புகளை உருவாக்குதல்.
- முதுகலை, முனைவர், முனைவர் பட்ட மேலாய்வு உள்ளிட்ட பட்டப் படிப்புகளில் செம்மொழித் தமிழைக் கற்கவும் ஆராய்ச்சி மேற்கொள்ளவும் வாய்ப்பை உருவாக்குதல்.
- கல்வி நிறுவனங்களிடமிருந்தும், தனிநபர்களிடமிருந்தும் செம்மொழித் தமிழாய்வு தொடர்பாகப் பெறப்படும் ஆய்வுத் திட்டங்களுக்கு நிதியுதவி அளித்தல்.
- செம்மொழித் தமிழின் சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையில் தேசிய, பன்னாட்டு கருத்தரங்குகள், பயிலரங்குகள், பணியரங்குகளை நடத்துதல்; தகுதி வாய்ந்த கல்வி நிறுவனங்களுக்கு அவற்றை நடத்துவதற்குத் தேவையான நிதியுதவி அளித்தல்.
- செம்மொழித் தமிழின் சிறப்புகளை வெளிப்படுத்தும் ஆய்வு நூல்களைப் பதிப்பிக்க உதவி செய்தல்.
- செம்மொழித் தமிழில் முனைவர் பட்டமும், முனைவர் பட்ட மேலாய்வும் மேற்கொள்வோருக்கு உதவித்தொகை வழங்குதல்.

---

எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்லாள் உடையது அரண். குறள் 746

- செம்மொழித் தமிழாய்வில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு நல்கியோர்க்கு விருதுகள் வழங்கிச் சிறப்பு செய்தல்.
- செம்மொழித் தமிழ்க் கல்வியை இந்தியாவிலும் அயல்நாட்டிலும் மேம்படுத்துதல்.
- செவ்வியல் நூல்கள் சார்ந்த பழஞ் சுவடிகளையும் பதிப்புகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்தல்.
- தமிழ்ச் செவ்விலக்கியங்களில் பயின்றுவரும் மொழியாட்சியைப் புரிந்துகொள்ளுதல், விளக்குதல், நயம்பாராட்டுதல் ஆகிய திறன்களைக் கற்போர் அடையஉதவுதல் என்பதனை நோக்கமாகக் கொண்டு இணையவழிச் செம்மொழிக் கல்வித் திட்டத்தை நிறைவேற்றுதல்.
- 41 செவ்வியல் நூல்களுக்கான தரவகம் உருவாக்குதல், இலக்கண, இலக்கியக் கல்வி, இயற்கை மொழி ஆகியவற்றிற்குப் பயன்படும் மென்பொருள்களை உருவாக்குதல்.
- செம்மொழித் தமிழ் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் வழங்கும் மையமாகச் செயல்படுதல்.

**சாதனைகள்**

- பல்வேறு சங்க இலக்கிய நூல்கள், பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

---

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள் குறள் 751

- திருக்குறள் பல்வேறு உலக மொழிகளிலும், இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படுகின்றன.
- பல்வேறு பன்னாட்டு மற்றும் தேசியக் கருத்தரங்குகள் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டன.

## செம்மொழித் தமிழாய்வு நிறுவன விருதுகள்

- இந்திய அறிஞர் ஒருவருக்கு ரூபாய் 5 இலட்சம் பரிசுத் தொகையுடன் தொல்காப்பியர் விருது வழங்கப்படுகிறது.
- வெளிநாட்டினர் ஒருவருக்கும், வெளிநாடுவாழ் இந்தியர் ஒருவருக்கும் ரூபாய் 5 இலட்சம் பரிசுத் தொகையுடன் குறள்பீட விருதுகள் வழங்கப்படுகின்றன.
- இளந்தமிழர் விருது பெறும் ஒருவருக்கு ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத் தொகையுடன் வழங்கப்படுகிறது.

## கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளை

- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2008-ஆம் ஆண்டு ரூபாய் 1 கோடி வைப்புத் தொகையுடன் இவ்வறக்கட்டளை தொடங்கப்பட்டது.
- இவ்வறக்கட்டளையின் மூலம் செம்மொழி தமிழுக்குக் குறிப்பிட்ட வரைமுறைகளின் கீழ்த் தொண்டாற்றிய

---

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று. குறள் 753

தமிழறிஞருக்கு ஆண்டுதோறும் பத்து இலட்சம் பரிசுத் தொகையுடன் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது ஒவ்வொரு ஆண்டும் சூன் 3 அன்று வழங்க மறைந்த முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஆணையிடப்பட்டது.ஆனால்,2010-ஆம் ஆண்டுமுதல் நாளதுவரை இவ்விருது வழங்கப்படாமல் இருந்தது. தற்பொழுது விருதாளர் தெரிவிற்கான தேர்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

---

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். குறள் 754

**நிறைவுரை**

தமிழ் வளர்ச்சித்துறை இவ்வரசால் பெரிதும் போற்றப்படுகிற துறையாக இருக்கிறது. இத்துறை கலைச்சொற்களை உருவாக்கியும், சொற்பிறப்பு அகராதிகளை வடிவமைத்தும், தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்தும், பைந்தமிழ் நூற்களில் ஆய்வுகளை முடுக்கிவிட்டு தமிழறிஞர்களைப் போற்றியும், எழுத்தாளர்களுக்கு விருதுகள் அளித்தும், உலகத்தரம் வாய்ந்த தமிழ் இலக்கியங்களில் மற்ற மொழிகளில் பெயர்த்தும், ஆட்சி மொழியைச் செவ்வனே நடைமுறைப்படுத்தியும் தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும் எதிர்காலத் தலைமுறைகளுக்கு எடுத்துச்செல்லும் முயற்சியை அயராமல் ஆற்றி வருகிறது. இத்துறை இயந்திர வாழ்வில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் மனித மனங்களைச் சீர்மிகு இலக்கியங்கள் பக்கம் அழைத்துச் சென்று இளைப்பாற வைத்து அவர்களுக்குள் தமிழ்நாட்டின் விழுமியங்களாகத் திகழும் விருந்தோம்பல், வீரம், கண்ணோட்டம், சான்றாண்மை ஆகியவற்றை இணைத்து ஒரு கண்ணில் வீரத்தோடும் மறு கண்ணில் ஈரத்தோடும் திகழ வைத்து உன்னதமான தமிழ்ச் சமுதாயத்தை உலகுக்குப் படைத்துக்காட்டும் தன் முயற்சியில் தொய்வின்றித் தொடர்ந்து பாடுபடும்.

---

அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு. குறள் 757

## வரவு - செலவுத் திட்ட மதிப்பீடு 2021-2022

| வ. எண் | துறை | 2020-2021 இறுதி திருத்த மதிப்பீடு | 2021-2022 திருத்த வரவு - செலவு மதிப்பீடு |
|---|---|---|---|
| | | ரூபாய் ஆயிரங்களில் | |
| 1. | தமிழ் வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம் | 9,73,96 | 10,30,98 |
| 2. | தமிழ் வளர்ச்சி இயக்ககம் | 18,94,19 | 25,46,82 |
| 3. | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் | 1,30,76 | 1,72,71 |
| 4. | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை | 4,08,85 | 5,53,12 |
| 5. | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் | 24,91,96 | 30,76,27 |
| 6. | உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை | 5,91,44 | 6,45,90 |
| | மொத்தம் | 64,91,16 | 80,25,80 |

**தங்கம் தென்னரசு**

தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும்
தமிழ்ப் பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர்

---

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை. குறள் 758